பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 15 | வியாழக்கிழமை 01.11.2018 | கதிர் 360

**இனி இது ரகசியம் அல்ல!**

அரசியலில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்து விட்டார் வடக்கு முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி. வீ. விக்னேஸ்வரன்.

முதல்வர் இல்லத்தைக் காலி செய்தாகி விட்டது. தமக்குரிய உத்தியோக பூர்வ வாகனங்களை மீளக் கையளித்தாகிவிட்டது.

பக்கம் 02

## உயிர் இருக்கும் வரை சமஷ்டிக்கும், இணைப்புக்கும் இடம்கொடேன்

# ரணில் பதவிக்கு மீண்டால் உடனே ஜனாதிபதிப் பதவியைத் துறப்பேன்!



## மைத்திரி நேற்று ஆவேசம்

கொழும்பு, நவம்பர் 01

★ தற்போதைய சூழலில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகும் நிலைமை வந்தால் அடுத்த ஒரு மணி நேரத்தில் நான் ஜனாதிபதிப் பதவியைத் துறந்து விட்டு மக்களுடன் சேர்ந்து போராடப் புறப்பட்டு விடுவேன்.

★ வடக்கு – கிழக்கு இணைப்புக்கு இடம்கொடேன். ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு இணங்க மாட்டார் என்று நம்புகின்றேன். சமஷ்டியும் வழங்கப்படமாட்டாது. அப்படி இரண்டும் வழங்கப்படுவதாயின் என் மரணத்தின் மீதுதான் அது நடக்க முடியும். அதுவரையும் அப்படி நடக்க முடியாது.

– இப்படி நேற்று சூளுரைத்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. பக்கம் 11

## அலரிமாளிகைக்குள் அழுதபடியே ரணில்!

### மஹிந்த நேற்றுக் கிண்டல்



கொழும்பு, நவ. 01

ஜனாதிபதித் தேர்தலில் நான் தோல்வியடைந்த பின்னர், சிரித்தபடியே அலரிமாளிகையை விட்டு வெளியேறினேன். ஆனால், இவரோ பக்கம் 11

## ஜனாதிபதி – சபாநாயகர் நேற்று நேரடிச் சந்திப்பு!

### அரசமைப்புக்கிணங்க ரணிலே பிரதமர் என்று கரு திட்டவட்டம் 16 இற்கு முன் நாடாளுமன்றத்தைக் கூட்ட மைத்திரி நடவடிக்கை



கொழும்பு, நவ.01

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும் இடையில் நேற்று மாலை முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் மாலை 5 மணியிலிருந்து 6 மணிவரை நடைபெற்ற ஒரு மணிநேரச் சந்திப்பில் பக்கம் 11



## சம்பந்தனுடனும் நேற்று ஐ.நா. பிரதிநிதி சந்திப்பு



கொழும்பு, நவ. 01

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் அம்மையார் நேற்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் 11

## மஹிந்தவை வீட்டுக்கு அனுப்ப மேற்குலகம் தீவிர நடவடிக்கை

### பலம் வாய்ந்த நாடுகளின் தூதுவர்கள் சபாநாயகருடன் முக்கிய பேச்சு

கொழும்பு, நவ 01

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று மாலை சந்திக்க முன்னர் பலம் வாய்ந்த மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் சபாநாயகரை நேரில் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தினர். பக்கம் 11



## வெளிநாட்டு வற்புறுத்தலுக்காக நாடாளுமன்றைக் கூட்டுவதா?



### கடும்தொனியில் கோட்டாபய சீற்றம்

கொழும்பு, நவ. 01

இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையீடு செய்யப் பல நாடுகள் முயற்சிக்கின்றன பக்கம் 11

## அரசியல் குழப்ப நிலைக்கு விரைந்து தீர்வு காணுங்கள்!

### மைத்திரிக்கு ஐ.நா. கடும் அழுத்தம்

கொழும்பு, நவ. 01

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலையை விரைவில் தீர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டியது அவசியமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று நேரில் வலியுறுத்திக் கூறியுள்ளது ஐ.நா.

ஜனாதிபதியை அவரது இல்லத்தில் நேற்றுச் சந்தித்துப் பேசிய ஐக்கிய நாடுகள் பக்கம் 11



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir



# சு.க. தலைமையகம் செல்கிறார் மஹிந்த

கொழும்பு, நவ. 01

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சுமார் மூன்றாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் சுதந்திரக்கட்சி தலைமையகத்துக்குச் செல்லவுள்ளார்.

இதற்கான நிகழ்வை பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு மஹிந்தவின் சகாக்கள் தீர்மானித்துள்ளனர். அத்துடன், இன்று நடைபெறவுள்ள சு.க வின் மத்திய குழுக் கூட்டத்திலும் மஹிந்த பங்கேற்பார் என அறியமுடிகின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பின்னர், சு.கவின் தலைமைப் பொறுப்பும் மஹிந்தவிடமிருந்து பறிக்கப்பட்டது.

இதனால், கட்சி சார்ந்த எந்தவொரு நடவடிக்கையிலும் மஹிந்த பங்கேற்கவில்லை என்பதுடன், மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கு விடுக்கப்படும் அழைப்புகளையும் நிராகரித்து வந்தார்.எனினும், சு.கவின் உறுப்புரிமையை அவர் துறக்கவில்லை. எம்.பி. பதவி பறிபோய்விடும் என்பதால் அவர் இது விடயத்தில் மதில்மேல் பூனையாகவே வலம்வந்தார்.



காலப்போக்கில் புதிய கட்சிக்குத் தலைமை தாங்கி அதை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றாலும், சு.கவிலிருந்து விலகும் அறிவிப்பை விடுக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் மஹிந்தவுக்குப் பிரதமர் பதவி கிடைத்துள்ளது. மைத்திரியும் அவரும் கரம் கோர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்அடிப்படையிலேயே சு.கவின் மத்திய குழுக் கூட்டத்தில் அவர் பங்கேற்கவுள்ளார்.(ஐ)

# அலரிமாளிகைக்குள் நுழைந்த இரண்டு நபர்களால் பதற்றம்!

கொழும்பு, நவ. 01

இரு வேறு வெளியாள்கள் அலரி மாளிகைக்குள் நுழைந்தமையால் அங்கு பதற்றமான சூழல் உருவாகியுள்ளதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அலரிமளிகைக்குள், நேற்று மஹிந்த தரப்பினர் இருவர் நுழைந்தமையாலேயே இந்தப் பதற்றம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பிரதமராக மஹிந்த பொறுப்பேற்றுள்ள நிலையில், ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் அரசமைப்பின்படி தானே பிரதமர் எனக் கூறி அலரி மாளிகையில் இருந்து வெளியேறாமல் உள்ளார்.

இந்நிலையில் அங்கு வந்த புதிய பிரதமர் மஹிந்தவின் ஆட்கள், அலரிமாளிகையில் உள்ள பொருள்களை ஆய்வுசெய்யவும், அவற்றை அகற்றவும் முற்பட்டுள்ளனர் என ரணில் விக்கிரமசிங்கவின்ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

பின்னர் அவர்கள் அலரி மாளிகையை விட்டு வெளியேறியனர் எனவும், இதனால் அங்கு சுமூகமான நிலை ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஐ)

# சம்பந்தன் தலைமையில் கொழும்பில் நாளை கூடுகின்றது கூட்டமைப்பின் உயர்மட்டக் குழு

நாட்டில் அரசியல் குழப்ப நிலை நீடித்துள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தத் தகவலை கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றிரவு 'காலைக்கதிர்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நாளை மாலை 4 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

பிரதமர் பதவிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக் காட்டுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கடும் போட்டி நிலவி வருகின்றது. இதனைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

இந்நிலையில்,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கலந்தாலோசிப்பதற்காக கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டம் நாளை நடைபெறுகின்றது என இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

# கொழும்பில் திரண்ட மக்கள் படை அதிர்ச்சியில் உறைந்தார் மஹிந்தர்

## இரவோடிரவாகச் சகாக்களுடன் பேச்சு

கொழும்பு, நவ. 01

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்தும், அரசமைப்புக்கு முரணாக மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டக் கோரியும் ஐ.தே.கவின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று முன்தினம் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அலைகடலெனத்திரண்டு ரணிலின் கரங்களைப் பலப்படுத்தியமையை அடுத்து மைத்திரி – மஹிந்த அணியினர் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

முன்னதாக, அரச கட்டடங்களுக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவதற்கும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதைத் தடைவிதித்தும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றத் தடை உத்தரவைப் பொலிஸ் பெற்றிருந்தது.

அத்துடன், பொலிஸார் 2000 பேரும், விசேட அதிரடிப் படையின் 10 அணிகளும் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் நீர்ப்பீரங்கி வாகனங்களும் ஆயத்தமாக நிறுத்தப்பட்டிருந்தன.

எனினும், எதிர்பார்க்கப்பட்டதை விட பெரும்தொகையான ஐ.தே.க. ஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் அணிதிரண்டமையையும் அவர்கள் அதீத பொறுமை மற்றும் கட்டுப்பாடைக் கடைப்பிடித்தமையும் அடுத்து மைத்திரி–மஹிந்த அணியினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# பெரும் பரபரப்புக்கு மத்தியில் கூடுகிறது சு.கவின் மத்திய குழு

## மஹிந்தவின் சகாக்களுக்கு மீண்டும் பதவி

கொழும்பு, நவ. 01

பரபரப்பான அரசியல் சூழ்நிலைக்கு மத்தியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இன்று வியாழக்கிழமை கூடவுள்ளது.

கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அவரது இல்லத்தில் கூடவுள்ள இந்தக் கூட்டத்தில் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளன.

அத்துடன், கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் புதிய அமைப்பாளர்களை நியமித்தல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.

அதேவேளை, சுதந்திரக் கட்சிலிருந்து நீக்கப்பட்ட, தொகுதி அமைப்பாளர் பதவிகளிலிருந்து தூக்கப்பட்டவர்களுக்கு மீள்நியமனம் வழங்குவது குறித்து தீர்க்கமான முடிவெடுக்கப்படவுள்ளது.ஐ

# வலுவிழந்தோர் சங்க மலிவு விற்பனை

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்ப்பாணம், திருநெல்வேலி வடக்கு, ஆடியபாதம் வீதி, 47/2 இலக்கக் கட்டடத்தில் இயங்கி வரும் வலுவிழந்தோர் புனர்வாழ்வுக் கழகம், தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இன்று தொடக்கம் 5 ஆம் திகதி வரை மலிவு விற்பனை நடைவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

நிறுவனப் பிள்ளைகளால் தைக்கப்பட்ட சிறுவர் உடுப்புக்கள், கவுஸ்கோட், தலையணைகள், தலையணை உறைகள், பாவாடைகள் மற்றும் என்வலப்கள் , இன்னும் பலவகையான பொருள்கள் காட்சிப்படுத்தப்படும். எந்தப் பொருளாக இருப்பினும் பத்து வீதம் விலைக்கழிவுடன் அங்கு பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது.

# இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் புதிய இல்லத்துக்குக் குடிபெயர்ந்துள்ள நீதியரசர் விக்னேஸ்வரன் அடுத்த கட்டப் பணியாகத் தனது புதிய அரசியல் கட்சியின் அமைப்பு வேலைகளில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார்.

தமது புதிய கட்சிக்கான உத்தேச யாப்பு வரைதல் உட்படப் பணி களை அவர் தொடங்கியுள்ளார்.

புதிய கட்சியில் முக்கிய பொறுப்புக்களை ஆரம்பத்தில் யார், யாரிடம் ஒப்படைப்பது என்பது குறித்துத் தீர்மானிக்க வேண்டியவராக அவர் இருக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பில் இந்த வார இறுதி முதல் பல்வேறு ஆள்களையும் நேரடியாக சந்தித்திப்பேசவிருக்கிறார், நேர்முகம் காணவிருக்கின்றார் என அவருக்குத் நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

"முதலமைச்சருக்குரிய பொறுப்புக்கள்,கடமைகள், எஞ்சியிருந்த கொடுக்கல் – வாங்கல்கள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்துவிட்ட விக்னேஸ்வரனின் முழுக்கவனம் இனித்தமது 'தமிழ்மக்கள்கூட்டணி' கட்சியின் ஸ்தாபக விவகாரத்தில் முனைப்பாக இருக்கும். அவர் கட்டுக் கோப்பான கட்சி ஒன்றை ஆரம்பத்திலிருந்து கட்டி எழுப்புவார்." – என்று அந்த வட்டாரங்கள் உறுதியாகக் கூறின.

தம்முடன் மிக நெருக்கமானவராகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும் இருக்கும் மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனை, அவர் ஸ்தாபித்த 'தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தை' வலுப்படுத்தும் நடவடிக்கையை எடுக்குமாறு வழிப்படுத்தியுள்ள நீதியரசர், மற்றொரு முன்னாள் அமைச்சரான அனந்தி சசிதரனையும் அவர் ஆரம்பித்துள்ள 'ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தை' வளர்த்தெடுக்கும்படியும் பரிந்துரை செய்திருக்கின்றார்.

தமது புதிய கட்சியுடன் ஏனைய அரசியல் கட்சிகளை கூட்டணி அமைக்கச் செய்யும் விடயத்தில் சிலதரப்புகளினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள், கட்டுப்பாடுகள், முன்னறிவித்தல்கள் குறித்துக் கேட்டபோது சிரிப்பை பதிலாக உதிர்த்த நீதியரசர், அதில் இப்போதைக்குக் கவனம் செலுத்துவதை விடுத்து, தமது கட்சியை வலுவாகக் கட்டி எழுப்புகின்றமையில் மட்டுமே சிரத்தை எடுப்பார் என்று பதிலளித்தார் என அறிய வந்தது.

இது புதிய சவால். ரயிலை ஓட்டலாம். அது சுலபம். ஆனால் புதிய தண்டவாளம் அமைத்து அதில் ரயிலை ஓட்டுவது மிகுந்த சிரமமான காரியம். அதைத்தான் இந்தத்தள்ளாதவயதில் ஆரம்பித்திருக்கின்றார் நீதியரசர். 'சவாலே சமாளி' என்ற நிலைமைதான் அவருக்கு.

-மின்னல்-

# மஹிந்த நியமனத்தை எதிர்த்து இந்தியாவிலும் ஆர்ப்பாட்டம்

அரசமைப்புக்கு முரணாக ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கி புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியாவில் அமைதிப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

டில்லியில் அமைந்துள்ள தெற்காசிய பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பல்கலைக்கழகத்தில் இலங்கையைச் சேர்ந்த 8 மாணவர்களே கல்வி கற்கின்றபோதும், ஏனைய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி இரண்டு பேரில் யாருக்குப் பெரும்பான்மை இருக்கின்றது என்பதை ஜனநாய ரீதியாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் ஒன்றையும் இந்த மாணவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

100 மாணவர்களுக்கு மேல் கையொப்பமிட்ட கடிதத்தை டில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பிரதித் தூதுவரிடம் மாணவர்கள் ஒப்படைத்துள்ளனர்.(ஐ)

# அதிபர் போட்டிப்பரீட்சை; வழிகாட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம் நவ. 01

யாழ்மறைமாவட்டக்கத்தோலிக்க ஆசிரியர்சங்கத்தால்நடாத்தப்படும் அதிபர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகின்றது.

கத்தோலிக்க ஆசிரியர்கள் இந்த அறிவித்தலைக் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ

# அமரர் க. கனகராசாவின் 91 ஆவது அகவையும் கௌரவப் பேருரையும்

யாழ்ப்பாணம், நவ.1

அமரர் கலாநிதி க. கனகராசா அவர்களின் 91 ஆவது அகவை நாளும் நினைவுப் பேருரையும் யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் மரம் நடுகை விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இராம கிருஷ்ண வித்தியாசாலையில் மாவட்ட சாரணர் ஆணையாளர் செ. தேவரஞ்சன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் கலந்து கொண்டு உரையாற்றுவார். விருந்தினர்கள் நினைவுப் பேருரைகள் நிகழ்த்துவர். கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் மா. புவனேந்திரன் கௌரவிக்கப்படவுள்ளார். யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் இ.தவகோபால் நன்றியுரை ஆற்றுவார். (இ

# வெடுக்குநாறிமலை ஆலயத்துக்கு கிணறு அமைக்கும் பணி பாதிப்பு

## பொலிஸாரின் தலையீடு காரணமாக



வவுனியா, நவ. 01

வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு குழாய்க் கிணறு அமைக்கும் ஆலய நிர்வாகத்தினின் முயற்சிக்கு நெடுங்கேணி பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இது அரசுக்குச் சொந்தமான இடம். மீறிச்செயற்பட்டால் அனைவரையும் கைது செய்வோம் எனக் கிணறு அமைப்பதற்கு வந்தவர்களைப் பொலிஸார் அச்சுறுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கிணறு அமைப்பதற்கென வந்தவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஆலயத்துக்குக் குழாய்க் கிணறு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பொலிஸாரின் தடை காரணமாகத் திரும்பிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாலக சில்வாவுக்கு விசேட பாதுகாப்பு

ஜனாதிபதி மைத்திரி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள் ளதாகச் சிறைச்சாலை கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாலக டி சில்வா கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தற்போது அவரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு சிறப்பு அறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டா உள்ளிட்ட பிரமுகர்களை கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதில் நாலகவுக்கும் பங்குண்டு என ஊழல் எதிர்ப்பு படையணியின் பிரதானி நாமல் குமார தகவல் வெளியிட்டிருந்தார். அதன் பின்னர் ஐந்து நாள்கள் தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவந்த நாலக டி சில்வா, கடந்த 25ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி அவர் மீண்டும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதிக்கு எதிரான கொலைச் சதித்திட்டம் வெளியான பின்னர் அதற்கு பிரதமர் ரணில் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியினர் காட்டிய அக்கறை குறித்து ஜனாதிபதி மைத்திரி அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆட்சி மாற்றத்துக்கே இவ்விடயம் வழிவகுத்துள்ள நிலையில், அத னால் ஏற்படும் விளைவுகளை கருத்திற்கொண்டே நாலக டிசில்வாவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# அமைச்சில் கடமையை பொறுபேற்றார் டக்ளஸ்



கொழும்பு, நவ. 01

எந்தவொரு வேளையிலும் பிரச்சினைகளை முன்வைக்கத் தன்னிடம் வரலாம் என்றும், அவற்றைத் தீர்த்து வைக்கத் தயார் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அமைச்சில் நேற்றுக் கடமைகளை ஆரம்பித்தார்.

தனது கடமைகளைப் பெறுப்பேற்ற பின்னர் அங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

கடந்த அரசால் மக்களுக்கு உரிய முறையில் சேவை ஆற்றப்படாததன் காரணமாக மீண்டும் ஒருமுறை எனக்கு இந்த வாய்ப்பு உருவாகியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது மக்களை ஏமாற்றத்திற்கு அல்லது அசௌகரியத்திற்கு உள்ளாக்காமல், உரிய நேரத்தில் உரிய சேவையை வழங்க வேண்டும்.

மக்களுக்கு அவசியமான சேவைகளை வழங்கும்போது உத்தியோகத்தர்களுக்குப் பிரச்சினைகள் ஏதும் ஏற்படுமாயின், அவ்வாறான எல்லாப் பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்வதற்கு முன்வருவேன்.

நாட்டு மக்களுக்கு அல்லும் பகலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஒருவன் என்ற வகையில் உங்கள் அனைவருக்கும் இருக்கின்ற புதிய கருத்துக்களையும், நிலவுகின்ற பிரச்சினைகளையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் என்னிடம் முன்வைக்கலாம்.

அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு அமைச்சர் என்ற வகையில் நான் தயாராகவே இருக்கின்றேன்–என்றார். (ஐ)

# ரஷ்ய ஆதரவைப் பெற மஹிந்த தீவிர முயற்சி

கொழும்பு, நவ. 01

புதிதாகப் பிரதமராகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சர்வதேச சமூகத்தின் ஆத ரவு கிடைக்காத நிலையில், அவர் ரஷ்யாவிடம் உதவி கோரியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி தயான் ஜயதிலக, நேற்று முன் தினம் மொஸ்கோவில், ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து எடுத்துக் கூறியுள்ளார்.

தெற்காசிய மற்றும் ஈரான் விவகாரங்களைக் கவனிக்கும், ரஷ்ய வெளிவிவகார அமைச்சின், இரண்டாவது ஆசிய டிவிசனின், அதிகாரிகளுக்கே அவர் இலங்கைநிலைவரங்களைவிளக்கியுள்ளார்.

இலங்கை அரசின் வழிகாட்டலுக்கு அமையவே, கொழும்பில் இருந்து பரிமாறப்பட்ட தகவல்களை அவர் ரஷ்ய அதிகாரிகளிடம் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கை வெளிவிவகார அமைச்சராக பொறுப்பேற்றுள்ள கலாநிதி சரத் அமுனுகமவின் வாழ்த்துக்களை அவர் ரஷ்ய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியமையுடன், அவரது பின்புலம் குறித்தும் ரஷ்ய அதிகாரிகளுக்கு விளங்கப்படுத்தினார்.

இலங்கை பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்தவுக்குச் சீனா மாத்திரமே இதுவரை வாழ்த்துக் கூறியுள்ளது. ஏனைய நாடுகள் அவரை இன்னமும் அங்கீகரிக்காத நிலையில், மஹிந்த தனது நெடுநாள் கூட்டாளிகளில் ஒன்றானரஷ்யாவுக்குத்தூது அனுப்பியுள்ளார்.

கலாநிதி தயான் ஜயதிலக மஹிந்தவின் ஆலோசகராக இருந்தவர் என்பதுடன், அண்மையில் இலங்கை ஜனாதிபதியால் ரஷ்யாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீனா பயணமாவதை பிற்போட்ட மைத்திரி

## அரசியல் குழப்பம் காரணமாக

கொழும்பு, நவ. 01

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை சீனாவுக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தை பிற்போட்டுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் அழைப்பை ஏற்று, இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பீஜிங்குக்கு மூன்று நாள்கள் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். நாளை அவர் பீஜிங் புறப்படுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

எனினும் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களை அடுத்து, அவர் இந்தப் பயணத்தைப் பிற்போட்டுள்ளார் என்று தக வல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# பெரும்பான்மையானவர்கள் மஹிந்தவைப் பிரதமராக ஏற்பு

## பேராசிரியர் சுதந்த லியனகே தெரிவிப்பு



கொழும்பு, நவ. 01

மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நாட்டில் பெரும்பான்மையானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனப் பேராசிரியர் சுதந்த லியனகே தெரிவித்தார்.

எனவே, இந்த விடயத்துக்குத் தீர்ப்பதற்குப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய தேவை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு, இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று இலங்கையில் பாரிய அரசியல் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து, இந்த நியமனம் தொடர்பில் பெரும்பான்மை அவசியம் என்ற கருத்தொன்று தெரிவிக்கப்படுகிறது.

இதில், யாருக்குப் பெரும்பான்மை பலம் உள்ளது என்பதை நாடாளுமன்றமும் மக்களும் தான் தீர்மானிக்க வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள இந்தப் புதிய பிரதமர் நியமனத்தால் நாட்டில் எந்தவொரு குழப்பமும் ஏற்படவில்லை. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை. அரச திணைக்களங்களும் சுமூகமான முறையிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

எனவே, இந்த விடயத்தை குழப்பிக்கொள்ள வேண்டியத் தேவையில்லை. சில தரப்பினர் கூறுவதுபோல உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்தும் அளவுக்கு நாட்டில் நிதி வசதி இல்லை. இதனால், பொதுத் தேர்தல் ஒன்று இப்போதைக்கு அவசியமே இல்லை.

புதிய பிரதமர் விடயத்தில் ஜனாதிபதி செயற்பட்ட விதத்தை நாம் முற்றாக ஏற்றுக்கொள்கிறோம்–என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜனாதிபதிக்கு உள்ள நெருக்கடி

**இலங்கையின் ஜனநாயக விழுமியங்களும், அரசமைப்புச் சட்டத்தின் ஆட்சியும் கேள்விக்குள்ளாகியிருக்கின்றன என்று கருதும் சர்வதேச சமூகம் - குறிப்பாக மேற்குலகம் - இலங்கை விடயத்தில் அதீத தலையீடு காட்டும் நிலைமை உருவாகியிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

**அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன மிகுந்த - விசேட - சிரத்தை எடுத்து இலங்கை விவகாரத்தை மிக ஊன்றி அவதானித்த வண்ணம் இருக்கின்றன என்று தெரிகின்றது.**

**நல்லாட்சி அரசைக் குழப்பி, அரசமைப்புக்கு முரணான வகையில் பிரதமர் ரணிலின் ஆட்சியை வீட்டுக்கு அனுப்பிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தை முடக்கிய நடவடிக்கை மிகமோசமான ஜனநாயகப் படுகொலை என்று கருதும் மேற்குலகம், இந்தச் செயற்பாட்டுக்காக ஜனாதிபதி மீதும் அவரது அரசுக் கட்டமைப்பின் மீதும் கடும் சீற்றம் கொண்டிருக்கின்றது.**

**முடக்கப்பட்ட நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஜனநாயகத்துக்குப் புத்துயிர்ப்பு ஊட்ட முன்வருமாறு அவை வலியுறுத்தி நிற்கின்றன.**

**ஜனாதிபதியையும், சபாநாயகரையும், பிற அரசுத் தலைவர்களையும் சந்தித்த மேற்குலகின் பிரதிநிதிகள் வெளிப்படையாக இவ்விடயத்தை வலியுறுத்தியிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.**

**ஜனநாயக மீட்புநடவடிக்கை உடனடியாக முன்னெடுக்கப்படாவிட்டால் இலங்கை ஆட்சிப் பீடத்துக்கு எதிராகப் பொருளாதாரத் தடை உட்படப் பல காட்டமான நடவடிக்கைகளை மேற்குலகம் முன்னெடுக்கும் என்ற எச்சரிக்கை நேரடியாக அரசுத் தலைவருக்கும் சபாநாயகருக்கும் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அறிய முடிகின்றது.**

**இலங்கை அரசுத் தலைமையின் போக்கு இதே பாணியில் தொடருமானால் அடுத்த மார்ச் மாதம் ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக கடும் வாசகங்களில் அமைந்த பிரேரணை வரும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் ஊகம் வெளியிடுகின்றன.**

**ஐ. நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்த பவர் வெளியிட்ட கருத்து இந்தச் சமயத்தில் மிக முக்கியத்துவம் பெறுகின்றது.**

***"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைகளால் ஜனநாயகம் வீழ்த்தப்பட்டுள்ளது. போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர் மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றார்.***

***"ஜனாதிபதி மைத்திரிபால பொறுப்புக் கூறுவதுக்கு உறுதியளித்தார், ஆனால் போர்க்குற்றங்கள், காணாமல் ஆக்கப்படுதலுக்குப் பொறுப்பான ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வந்திருக்கின்றார்."*** **- என விசனத்துடன் சுட்டிக்காட்டும் சமந்த பவர், இலங்கை விடயத்துக்குத் தீர்வு காண்பதற்கு அவசர இராஜதந்திரம் தேவை என வலியுறுத்தியிருக்கின்றார்.**

**அந்த அவசர இராஜதந்திரம் என்ன, அதனை மேற்குலகம் எப்படிப் பிரயோகிக்கப்போகின்றது என்பதே கேள்வி.**

**சமந்த பவரின் பிரதிபலிப்பு மற்றும் மேற்குல இராஜதந்திரிகள் இலங்கை விடயத்தில் காட்டும் சிரத்தை ஆகியன ஓர் அம்சத்தை தெளிவுபடுத்தி நிற்கின்றன.**

**கடந்த கால போர்க்குற்ற விவகாரங்களுக்காக மின்சாரக் கதிரைத் தண்டனையிலிருந்து யார், யாரை எல்லாம் தாம் காப்பாற்றினார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுவரை பீற்றிக் கொண்டாரோ, அவர்களை எல்லாம் மீண்டும் மின்சாரக் கதிரையை நோக்கி நெட்டித் தள்ளும் வேலையையே அவர் இப்போது செய்திருக்கின்றார் என்று தோன்றுகின்றது.**

**இலங்கை விவகாரத்தை நேரடியாகக் கையாள்வதற்காக மேற்குலகம் விசேட பிரதிநிதிகளை அடுத்து வரும் நாள்களில் கொழும்புக்கு அனுப்பக்கூடும் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.**

**ஜனநாயக நிலைமையை நாட்டில் ஸ்திரப்படுத்துவது தொடர்பில் மேற்குலகினதும், இலங்கைத் தேச மக்களினதும் அழுத்தத்துக்குக் கட்டுப்பட்டுத் தன்னை திருத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள் ஜனாதிபதி தள்ளப்பட்டிருக்கின்றார் என்றே தோன்றுகின்றது.**

**தாம் முடக்கிய நாடாளுமன்றத்தை இந்த அழுத்தத்திற்குக் கட்டுப்பட்டு நேரத்துடன் கூட்ட வேண்டிய நெருக்கடிக்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தள்ளப்பட்டுள்ளார் என்றும் தெரிகின்றது.**

**எது, எப்படி என்றாலும், அரசமைப்புக்கும், சட்டத்திற்கும் மாறாகத் தாம் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனநாயகத்தின் மாண்பில் பெரும் கறையை ஏற்படுத்தி விட்டார் என்பது மறுக்கமுடியாத உண்மை.**

# மக்கள் மாற்றுவழி தேடுவதை எவராலும் தடுக்கவே முடியாது

## ஜனாதிபதியிடம் சபாநாயகர் இடித்துரைப்பு



கொழும்பு, நவ. 01

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி, ஸ்திரத்தன்மையை உருவாக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ள சபாநாயகர் கரு ஜயசூரிய, அவ்வாறு இல்லாவிடின் ஜனநாயக உரிமையைப் பாதுகாப்பதற்காக, மாற்றுவழியைத் தேடி மக்கள் செல்வதை எவராலும் தடுக்கமுடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிய ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன, புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்தமையுடன், நாடாளுமன்றத்தை, நவம்பர் மாதம் 16ஆம் திகதிக்கு, கடந்த 27ஆம் திகதியன்று ஒத்திவைத்தார்.

இந்நிலையில், நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு, சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புகள், ஜனாதிபதியை வலியுறுத்தின. அதுதொடர்பில், சபாநாயகர் கரு ஜயசூரியவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏற்கனவே கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

அதன்பின்னர், கட்சித் தலைவர்களின் கூட்டம், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன்போது, தங்களுடைய உரிமைகள் மற்றும் வரப்பிரசாதங்களைப் பாதுகாக்குமாறு, அதற்காக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு, மக்கள் பிரதிநிதிகள் 125 இற்கும் மேற்பட்டோர் கையொப்பமிட்டு கடிதமொன்றைச் சபாநாயகரிடம் கையளித்துள்ளனர்.

அதனையடுத்து, சபாநாயகர் கருஜயசூரிய, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜே.வி.பி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிலைநாட்டுவதற்காக உடனடியாக, நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரியுள்ளன.

அதன்பின்னர், ஜனாதிபதிக்குச் சபாநாயகரால் அனுப்பிவைத்துள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடு, பிரச்சினைக்குள் செல்வதற்கு இடமளிக்காது, ஜனநாயகத்தின் பேரில், நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு மேலே குறிப்பிட்ட கட்சிகள் கோரியுள்ளன. அவற்றுக்கு செவிசாய்ப்பது என்னுடைய பொறுப்பாகும். அதனை நிறைவேற்றவேண்டுமாயின் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி, பெரும்பான்மையை கொண்டிருக்கும் கட்சிக்கு அதிகாரத்தைக் கொடுப்பது மட்டுமேயாகும். அவ்வாறு செய்யாவிடின், ஜனநாயக உரிமை கடத்தப்பட்டதாகும்.

18 நாள்களுக்கு நாடாளுமன்றத்தை செயலற்றதாக்கியமை, ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்கான வரத்தை பெற்றுக்கொண்ட உங்களால் இடம்பெற்றதை நம்பமுடியவில்லை. அதேபோல, அது சர்வதேசத்தின் முன்னிலையில் நீங்கள் பெற்றிருக்கும் கௌரவத்துக்குப் பங்கத்தை ஏற்படுத்தும்.

நாட்டுக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமைகளால், தற்போதைக்கு இரண்டு உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. பல இடங்களில் மக்கள் அன்றாட வாழ்க்கை சீர்குலைந்துள்ளது. ஊடக நிறுவனங்களுக்குள் பலவந்தமாக நுழைந்து, அதன் நிர்வாகம் கடத்தப்பட்டுள்ளது. தொழில் புரியும் இடங்களில் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என அறிக்கை கிடைத்துள்ளது. நாங்கள் வரம்பெற்ற, நல்லாட்சி கலாசாரம் இதுவல்ல. உங்களால், பிரதமரும் அமைச்சரவையும் தற்போதைக்கு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆகையால், இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்காது நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி, ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு இல்லாவிடின், ஜனநாயக உரிமையைப் பாதுகாப்பதற்காக மாற்றுவழியைத் தேடி மக்கள் செல்வதைத் தடுக்கமுடியாது.

மக்களின் நலன்புரிக்காக, நாட்டில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு இடமளிக்காது, ஜனநாயக நாமத்தின் பெயரில் நாடாளுமன்றத்தைக் கூட்டி, நீதியை நிலை நாட்டுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்குமாறு உங்களிடம் மீண்டும் கோரிக்கை விடுகின்றேன்-என் றுள்ளது. (ஐ)

# வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் நாடாளுமன்றைக் கலைக்கத் திட்டம்?



கொழும்பு, நவ. 01

புதிய அரசு, நாடாளுமன்ற வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைக்கும், உள்ளார்ந்த அதிகாரங்களைக் கொண்டிருக்கிறார் என்று கல்வி, உயர் கல்வி அமைச்சராக பொறுப்பேற்றுள்ள விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவில் இருந்து கட்சி தாவி, புதிய அரசில் அமைச்சர் பதவியை ஏற்றுள்ள அவர், மேலும்கருத்துவெளியிடுகையில்,

இடைக்காலத்தில் அரசின் செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை சமர்ப்பித்து, அதனை அங்கீகரிக்கும் வாக்கெடுப்பு ஒன்றுக்குச் செல்வதே இப்போது புதிய அரசின் அவசர தேவையாக உள்ளது.

நிதி ஒதுக்கீட்டை நாடாளுமன்றம் அங்கீகரிக்காவிட்டால், அரசால் செயற்பட முடியாத நிலை ஏற்படும்.

அப்படியான நிலையில் நாட்டைக் குழப்ப நிலையில் இருந்து மீட்க, ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட முடியும். அது சட்டத்தில் எழுதப்படவில்லை. ஆனால் வெஸ்ட் மினிஸ்டர் முறையில் அது நடைமுறையில் உள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி நான்கரை ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதில்லை.

2015இல் ஐ.தே.கவின் சார்பில் 105 நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்கள் தெரிவாகினர். ஆனால் திடீர் தேர்தல் நடத்தப்பட்டால், அது 40 தொடக்கம் 50 பேராகக் குறைந்துவிடும்- என்றார். (ஐ)

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2018

"மரங்களை நாட்டுவதற்கான மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்"

*-சீனப் பழமொழி*

## நாளை

02.11.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: மகம் பி.இ. 12.36 வரை
திதி: நவமி கா. 7.29 வரை
சுபநேரம்: 6.04 - 7.34 வரை
இராகுகாலம்: 10.34 - 12.04 வரை

# விடுவித்த காணிகளுக்குச் செல்லும் வீதிகளை நேற்று மூடிய கடற்படை!

## முள்ளிக்குளம் மக்கள் பெரும் அசௌகரியம்



முல்லைத்தீவு, நவ. 01

முள்ளிக்குளத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குச் செல்லும் பிரதான வீதிகளைக் கடற்படையினர் மீண்டும் திடீரென மூடியுள்ளனர்.

இந்த வீதிகள் முட்கம்பிகளைக் கொண்டு தடை ஏற்படுத்தி நேற்று மூடப்பட்டுள்ளன. இதனால் முள்ளிக்குளம் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக முள்ளிக்குளம் பங்குத் தந்தை அருட்தந்தை லோரான்ஸ் லியோ தெரிவித்தார்.

முள்ளிக்குளம் கிராமத்துக்குக் கடற்படை முகாமினூடாகச் செல்லும் பிரதான வீதியைக் கடந்த 21ஆம் திகதி திடீரெனக் கடற்படையினர் முட்கம்பிகள் கொண்ட வேலியால் இடைமறித்து அடைத்தனர். இதற்கு மக்களின் எதிர்ப்பு வலுக்க அந்த வீதி கடற்படையினரால் மீண்டும் திறந்து விடப்பட்டது.

இந்நிலையில், நேற்றுத் திடீரென இந்த வீதிகளை கடற்படையினர் மூடியுள்ளனர்.

கடற்படையினரின் இந்தச் செயற்பாடுகளைக் கண்டித்து முள்ளிக்குளம் கிராம மக்கள், மாணவர்கள் இணைந்து முள்ளிக்குளத்தில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி

கொழும்பு, நவ. 01

புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நிலையில், மீண்டும் அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபா வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் நேற்றுப் புதன்கிழமை வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று வீதத்துக்கு அமைவாக, அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் கொள்வனவு விலை 172.3605 ரூபாவாகவும், விற்பனை மதிப்பு 176.25 ரூபாயையும் எட்டியுள்ளது.

ஆனால் கடந்த 5 வருட காலப் பகுதியில் பங்கு சந்தை வர லாற்றில் அனைத்து பங்குகளினதும் விலைச்சுட்டெண் அதிகரித்துள்ளது, இந்த அதிகரிப்பு கடந்த 3 நாள்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## குழப்பநிலையை தீர்ப்பதற்கு பொதுத் தேர்தலே ஒரே வழி

### உதய கம்மன்பிலவின் ஆலோசனை இது



கொழும்பு, நவ. 01

நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பகரமான அரசியல் சூழலுக்குத் தீர்வை முன்வைக்கப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என மஹிந்த ஆதரவு நாடாளு மன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை நிரூபிக்க வேண்டிய தேவை தமது தரப்புக்கு இல்லை எனவும் அவர் கூறினார்.

கொழும்பில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார் என்ற செய்தி வரும் முன்னர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெற்றுக்கொண்ட செய்தியே வெளிவந்தது. இதனால், அமைச்சரவை தானாகவே கலைந்தது. அரசமைப்பில் 42 (2) உறுப்புரையில் இந்த விடயம் தொடர்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அதாவது, அமைச்சரவை கலைந்தவுடன் பிரதமர் பதவியும் செல்லுபடியற்றதாகி விடும். அதேநேரம், 42 (4) உறுப்புரையில் ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு இணங்க நாடாளுமன்றில் பெரும்பான்மை உள்ள ஒருவரை நியமிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. இந்த காரணத்தினால்தான் மஹிந்தவை அவர், பிரதமராக நியமித்தார். மேலும், நாட்டில் சிங்கள மொழிதான் தேசிய மொழி. ஆனால், சிங்கள மொழி அரசமைப்புக்கும் ஆங்கில அரசமைப்புக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன.

பிரதமரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளதெனச் சிங்கள மொழி மூல அரசமைப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமையானது, ஆங்கில மொழி மூல அரசமைப்பில் பிரதமர் மரணித்தால் வேறு ஒரு பிரதமரை நியமிக்க முடியும் என்றே கூறப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர், ஆங்கில மொழி அரசமைப்பை பார்த்த காரணத்தினால்தான் இவ்வளவு குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில், ரணில் விக்கிரமசிங்க உயர் நீதிமன்றத்தைக் கூட நாட முடியும். ஆனால், அங்கு சென்றால் தமக்குப் பாதகமான தீர்ப்பு வந்துவிடும் என்ற காரணத்தால்தான் இதுவரை அவர்கள் உயர் நீதிமன்றை நாடவில்லை.

நாடாளுமன்றில் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தால் மட்டுமே மஹிந்தவை நீக்க முடியும். அவர்களுக்குப் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் இதனையும் அவர்கள் மேற்கொள்ளமாட்டார்கள். இந்நிலையில், நாடாளுமன்றைக் கூட்டுமாறு சர்வதேச நாடுகள் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றைக் கூட்டுமாறு வலியுறுத்த, அமெரிக்காவுக்கு என்ன அதிகாரம் உள்ளது? புதிய வரவு– செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்காகவே நாடாளுமன்றம் பிற்போடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்க வேண்டுமெனில் பொதுத் தேர்தலை நடத்துமாறு நாம் கோரிக்கை விடுக்கிறோம். மக்களின் ஆணைக்கு இணங்க புதிய பிரதமர் ஒருவரை நியமிக்க நாம் தயாராகவே இருக்கிறோம்.– என்றார். (ஐ)

## தமிழரின் குரலாக ஒலிக்க தவறிவிட்டது கூட்டமைப்பு

### அருட்தந்தை செபமாலை குற்றச்சாட்டு




மன்னார், நவ. 01

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கருதப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல தடவைகள் தமிழ் மக்க ளின் குரலாகச் செயற்பட தவறி யுள்ளதாக அருட்தந்தை இ.செப மாலை அடிகளார் தெரிவித்துள் ளார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த சில நாட்களாக இலங்கை முழுவதும் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை காரணமாக எந்தக் கட்சி யாருக்கு ஆதரவளிப்பது என்ற குழப்ப நிலையில் உள்ளது. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தீர்மானிக்கும் சக்தியாகக் காணப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆனால், அண்மை காலமாகப் பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பு தமிழ் மக்களின் குரலாக ஒலிக்காத சந்தர்ப்பங்களும் அமைந்திருக்கின்றன. ஆனாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் இதனைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு, தமிழ் மக்கள் உரிமை பிரச்சினை, தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக எந்த அரசு தாங்கள் செய்வோம் என்று சொல்கின்றதோ அதற்குக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஐ.நா.வில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை எந்த அரசு நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுக்கின்றதோ அந்த அரசுக்கே ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

போர்க்குற்றம், இனப்படுகொலை, காணாமல் ஆக்கப்பட்டோருடைய பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, அரசியல் சீர்திருத்தம், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை தொடர்பாக எந்த அரசு தாங்கள் செய்வோம் என்று வாக்குறுதி கொடுக்கின்றார்களோ அவர்களுக்கு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கவேண்டும்– என்றார்.

(ஐ)

## துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் கடற்படைச் சிப்பாயின் சடலம் !

### காங்கேசன்துறையில் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.01

காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் சடலம் கண்டெடுக் கப்பட்டுள்ளது.

கடற்படை முகாமின் ஆயுதக் களஞ்சிய நுழைவாசலுக்கு அரு கில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தச் சடலம் மீட்கப்பட்டது.

உயிரிழந்தவர் அனுராதபுரத்தை சேர்ந்த அபயரத்ன (வயது–19) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சிப்பாய் தனது துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டிருப்பது ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்வாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது . (ஐ)

## அரசமைப்புக்கு இணங்க நடந்து நெருக்கடியைத் தீர்க்கவேண்டும்

### சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு இலங்கை அரசிடம் வலியுறுத்தல்

அரசமைப்புக்கு இணங்கச் செயற்பட்டு நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, மனித உரிமைகள் மற்றும் சட்டத்துக்கு மதிப்பளித்து செயற்படுமாறு அனைத்து அரசியல் தலைவர்களுக்கும் அது வலியுறுத்தியுள்ளது.

புதிய பிரதமர் நியமனத்தைத் தொடர்ந்து இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை தொடர்பாக சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டம் அல்லது அரசமைப்பு விதிமுறைகளை மீறிப் பிரதமர் அகற்றப்பட்டமையானது, சர்வதேச சமூகத்தின் கடமைகளை மீறும் வகையிலான இலங்கையின் செயற்பாட்டை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளதாகவும் அந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை, நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டம் மற்றும் ஜனநாயக நெறிமுறைகளுக்கு ஏற்ப நாடாளுமன்றத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என சர்வதேச உரிமைக் குழு வலியுறுத்தியுள்ளது.(ஐ)

# உலகின் மிகப் பெரிய சிலையாக படேலின் உருவம் திறந்து வைப்பு





உலகிலேயே மிக உயரமான சிலையான, சர்தார் வல்லபாய் படேல் சிலையை பிரதமர் மோடி நேற்று திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்று அழைக்கப்படும் முதலாவது உள்துறை மந்திரி சர்தார் வல்லபாய் படேலுக்கு குஜராத் மாநிலத்தில் மிகப்பிரமாண்டமான சிலை அமைக்கப்பட்டு உள்ளது. நர்மதா மாவட்டம் சர்தார் சரோவர் அணை அருகே சாது பேட் என்ற குட்டித்தீவில் இந்த சிலை நிறுவப்பட்டு உள்ளது.

சர்தார் வல்லபாய் படேல், நாட்டை ஒன்றுபடுத்தியதை குறிப்பிடும் வகையில், 'ஒற்றுமைக்கான சிலை' என்று இது அழைக்கப்படுகிறது.

இதன் உயரம் 182 மீட்டர். உலகிலேயே மிக உயரமான சிலையாக கருதப்படுகிறது. அமெரிக்காவில் உள்ள சுதந்திர தேவி சிலையை விட 2 மடங்கு உயரம் கொண்டது.

சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளையொட்டி, இந்த சிலையை பிரதமர் நரேந்திர மோடி இன்று திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார். சிலையை அவர் திறந்து வைத்தவுடன், இந்திய விமானப்படைக்கு சொந்தமான 3 விமானங்கள் வானில் பறந்து சென்று, தேசிய கொடியில் உள்ள 3 வண்ணங்களில் பொடிகளைத் தூவி, வானில் தேசிய கொடியை உருவாக்கின.

மேலும் நாட்டின் ஒற்றுமையை குறிக்கும் வகையில், சிலை அருகே உருவாக்கப்பட்டு உள்ள ஒற்றுமை சுவரையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார். அப்போது, 3 போர் விமானங்கள், அந்த சுவருக்கு மேலே தாழ்வாக பறந்து சென்றன.


பின்னர், படேல் சிலைக்கு பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது, மி-17 ரகத்தை சேர்ந்த 2 ஹெலிகாப்டர்கள் மூலம் படேல் சிலை மீது மலர்கள் தூவப்பட்டன.

சிலை திறப்பை முன்னிட்டு, குஜராத் காவல் துறை, ஆயுதப்படை மற்றும் துணை ராணுவப் படைகளைச் சேர்ந்த பாண்ட் வாத்திய குழுவினரின் கலை நிகழ்ச்சிகளும், இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 29 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட கலைஞர்களின் நடன, இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சிலை திறப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள் காண வசதியாக, 135 மீட்டர் உயரத்தில் பார்வையாளர் மாடம் அமைக்கப்பட்டு உள்ளது. அங்கிருந்து சர்தார் சரோவர் அணையையும், அதைச் சுற்றி உள்ள மலைகளையும் பார்த்து ரசிக்கலாம்.




## சர்தார் வல்லபாய் படேலின் சிலையின் சிறப்பு அம்சங்கள்



உலகிலேயே உயரமான சர்தார் வல்லபாய் படேல் சிலையின் சிறப்பு அம்சங்கள் என்னென்ன தெரியுமா?

உயரம்: 182 மீட்டர் (நியூயார்க்கில் உள்ள சுதந்திர தேவி சிலையைக்காட்டிலும் சுமார் இரண்டு மடங்கு உயரமானது)

இடம்: நர்மதா ஆற்றின் சர்தார் சரோவர் அணைக்கருகே, ஆற்றுத் தீவான சாதுபேட் என்ற இடத்தில் சுமார் 3.5 கி.மீ. சுற்றளவு.

மதிப்பு: இந்தியப் பணத்தில் ரூ.2,989 கோடி (தோராயமாக).

சிற்பி: 93 வயதான பத்ம பூஷண் விருது பெற்ற பிரபல சிற்பி வி.சுதர்

கட்டுமான காலம்: 2 வருடங்கள், 10 மாதங்கள் (2015, டிசம்பர் 19இல் தொடங்கப்பட்டது).

பயன்படுத்தப்பட்ட பொருட்கள்: சிமெண்ட் 70 ஆயிரம் தொன்கள், வலுவூட்டப்பட்ட எஃகு 18,500 தொன்கள், 6000 தொன்கள் கட்டமைப்பு எஃகு மற்றும் 1,700 மெட்ரிக் தொன்கள் வெண்கலம்.

சிறப்பம்சங்கள்: உயரமான சிலைகள் பின்பற்றும் விதிகளில் இருந்து மாறுபட்ட வடிவமைப்பு. அடித்தளத்தில் குறுகி, மேலே செல்லச் செல்ல விரிவடையும் போக்கு.

மணிக்கு 180 கி.மீ. வேகத்தில் வீசும் காற்றின் வேகத்தை எதிர்த்து நிற்கும் வகையில் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

வரலாற்று ஆய்வாளர்கள், படேலை நேரில் சந்தித்தவர்களுடன் கலந்துரையாடி, சுமார் 2 ஆயிரம் புகைப்படங்களின் கலவையில் இருந்து ஒரு புகைப்படம் இறுதி செய்யப்பட்டது.

சிலை ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

முதல் பாகம் – கணுக்காலுக்கு மேலே வரை. (நினைவுப் பூங்காவும் மியூசியமும் அமைக்கப்பட்டுள்ளது)

இரண்டாம் பாகம் – தொடை வரை.

மூன்றாம் பாகம் – 153 மீட்டர் உயரத்தில் பொதுமக்கள் சுற்றுலாத் தலம்.

நான்காம் பாகம் – பராமரிப்புப் பகுதி.

ஐந்தாம் பாகம் – தலை மற்றும் தோள்கள் வரை.

# சொத்து குவிப்பு வழக்கில் தீர்ப்பு புதுச்சேரி எம்.எல்.ஏக்குச் சிறை

சொத்துக் குவிப்பு வழக்கில் புதுச்சேரி என்.ஆர். காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் அசோக் ஆனந்த் மற்றும் அவரது தந்தை ஆனந்தனுக்கு தலா ஓராண்டு சிறை தண்டனையும், அவர்களது ரூ. 1.57 கோடி சொத்துகளை பறிமுதல் செய்யவும் சி.பி.ஐ. சிறப்பு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி என்.ஆர்.காங்கிரஸ் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர் அசோக் ஆனந்த். இவரது தந்தை ஆனந்தன். இவர் கடந்த 2007-2008 காலகட்டத்தில் புதுச்சேரி மாநில பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளராக பணியாற்றியபோது வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததார் என சி.பி.ஐயிடம் புகார் வந்தது.

அதன் பேரில் விசாரணை நடத் திய சி.பி.ஐ. அதிகாரிகள், ஆனந்தன் ரூ.3.15 கோடி அளவுக்கு சொத்து குவித்ததார் என வழக்குப் பதிவு செய்தனர்.

இவ்வழக்கில் ஆனந்தன், அவரது மனைவி விஜயலட்சுமி, அவரது மகன் அசோக் ஆனந்த் ஆகியோர் மீது அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு மீதான விசாரணை புதுச்சேரி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

## பதவி பறிபோகும் ஆபத்து

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஆனந்தனின் மனைவி விஜயலட்சுமி மரணமடைந்து விட்டார். அதனால் ஆனந்தன் மற்றும் அவரது மகன் அசோக் ஆனந்த் ஆகிய இருவர் மீதான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் காலை முடிவடைந்தது. மாலையில் தீர்ப்பு அளிக்கப்படும் என்று தலைமை நீதிபதி தனபால் அறிவித்தார்.

நீதிபதி தனபால் நேற்று மாலை அளித்த தீர்ப்பில், சட்டப் பேரவை உறுப்பினர் அசோக் ஆனந்த், அவரது தந்தை ஆனந்தன் ஆகியோர் குற்றவாளி கள் என அறிவித்தார். இருவருக்கும் தலா ஓராண்டு சிறை தண்டனை அளித்த நீதிபதி, தலா ஒரு லட்சம் அபராதமும் விதித்தார்.

"அபராதம் கட்டத் தவறினால் தலா 3 மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். வருமானத்துக்கு அதிகமாக குவிக்கப்பட்ட ரூ. 1.57 கோடி மதிப்புள்ள சொத்துகளை பறிமுதல் செய்ய வேண்டும்" என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வழக்கில் எம்.எல்.ஏ. சிறைத் தண்டனை பெற்றுள்ளமை தொடர்பாக வழக்கறிஞர்கள் தரப்பில் கேட்டதற்கு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி வருமானத்துக்கு அதிகமான சொத்து சேர்த்த வழக்கில் ஒரு நாள் சிறைத்தண்டனை பெற்றாலும் எம்.எல்.ஏ. பதவி பறிபோகும் வாய்ப்பு உள்ளது. அத்துடன் சிறை தண்டனை காலத்தை அனுபவித்தால், அதன்பிறகு ஆறு ஆண்டுகள் வரை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு இல்லை என்று குறிப் பிட்டனர்.

இந்நிலையில் எம்.எல்.ஏ. அசோக் ஆனந்த், அவரது தந்தை ஆனந்தன் ஆகியோர் தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். அத்துடன் மேல்முறையீடு செய்ய உள்ளதாகவும் அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பின் முழு விவரத்தையும் அறிந்த பிறகே எந்த ஒரு முடிவும் எடுக்கப்படும் என புதுச்சேரி சட்டப் பேரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஆப்கானிஸ்தானில் இராணுவ ஹெலி வீழ்ந்து நொறுங்கியதில் 25பேர் பலி



ஆப்கானிஸ்தானில் இராணுவ ஹெலிக் கொப்டர் ஒன்று மோச மானவானிலை காரண மாக விழுந்து நொறுங் கியதில் 25 பேர் உயி ரிழந்தனர்.

ப்ராக் மாகாணத்தி லிருந்து ஹீராட் மாகா ணம் நோக்கி சென்ற இராணுவ ஹெலிக் கொப்டர் அனார் தாரா வில்உள்ளமலைப்பகுதி யில் விழுந்து விபத்துக் குள்ளாகியது. மோச மானவானிலைநிலவிய போது இந்த விபத்து நேரிட்டுள்ளது.

விபத்தில் ஹெலிக்கொப்டரில் இருந்த கொமாண்டர்கள், வீரர்கள் மற்றும் இரு பெண் கள் என மொத்தம் 25 பேரும் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதமும் இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று விழுந்து விபத்தில் சிக்கியது. இதில் 5 பேர் உயிரிழந்தனர்.

இத்தகைய ஹெலிக்கொப்டர் விபத்துக் களுக்கு தொழில்நுட்பக் கோளாறு காரணம் என்று கூறும் விசாரணை அதிகாரிகள் அது தொடர்பாக விளக்கமளிக்க மறுத்து வருகிறார் கள்.

இதற்கிடையே இராணுவ ஹெலிக்கொப் டரை நாங்கள்தான் சுட்டு வீழ்த்தினோம் என தலிபான்கள் கூறியுள்ளனர்.

இதேசமயம் –

காபூல் நகரில் அந்நாட்டின் மிகப்பெரிய சிறைச்சாலைக்கு வெளிப்புறம் பயங்கரவாதி கள் வெடிகுண்டை வெடிக்க செய்துள்ளனர். இதில் 7 பேர் பலியாகினர் என தெரிவிக்கப்பட் டுள்ளது. இச்சிறையில்தான் நூற்றுக்கணக் கான தலிபான்கள் அடைத்து வைக்கப்பட் டுள்ளனர்.

பயங்கரவாதிகள் சிறைக்கு பணிக்கு சென்றவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர், அவர்கள் தலிபான் இயக் கத்தை சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெய்வ நிந்தனைக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண்ணுக்கு விடுதலை

## பாக். உச்ச நீதிமன்றம் ஒன்பது வருடங்களின் பின் தீர்ப்பு



பாகிஸ்தானில் தெய்வ நிந் தனைசட்டத்தில்மரணதண்டனை விதிக்கபட்ட பெண் விடுதலை செய்யபட்டு உள்ளார்.

பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட சண்டை ஒன்றில் அசியா பீபி என்ற கிறிஸ்தவ பெண் முகமது நபியை அவமனாப்படுத்திய வழக்கில் 2010 ஆம் ஆண்டு அவ ருக்கு தண்டனை வழங்கப்பட்டது. ஆனால், தான் அவ்வாறாக அவ மானப்படுத்தவில்லை என்று கூறிவந்தார். எட்டு ஆண்டுகள் தனிமை சிறையிலும் அடைக் கப்பட்டார்.

தெய்வ நிந்தனைச் சட்டங்கள் வலுவாக உள்ள பாகிஸ்தானில் இவரது வழக்கு பலத்த சச்சரவை யும் பிரிவினையையும் ஏற்படுத்தியது.

இந்த வழக்கு மேல் முறையீட்டுக்கு வந்ததை தொடர்ந்து, கலவரம் ஏற்படும் என்ற அச்சத்தில் இஸ்லாமாபாத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

தீவிர மதசார்பாளர்கள் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த மேல்முறை யீட்டு மனு பாகிஸ்தான் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சாகிப் நிசார் அமர்வுக்கு முன் விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி கள் அசியா பீபியை விடுதலை செய்தனர். உடனடியாக அசி யாவை விடுவிக்க நீதிபதிகள் உத்தரவிட்டு உள்ளனர்.

நான்கு குழந்தைகளுக்கு தாயான ஆசியா 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அண்டை வீட்டாருடன் சண்டை போடு உள் ளார். இந்த சண்டை சாதாரண மான ஒரு விடயத்திற்காகதான் தொடங்கியது. அவர்கள் லாகூர் அருகே பழம் பறித்துக் கொண் டிருந்த போது, ஒரு பக்கெட் தண் ணீருக்காக தொடங்கியது.

தாங்கள் பயன்பாட்டுக்காக வைத்திருந்த தண்ணீரை எடுத்து ஆசியா அருந்திவிட்டார். இதனால், எங்கள் நம்பிக்கையின்படி அந்த தண்ணீரின் புனிதம் கெட்டுவிட்டது. இனி அந்த தண்ணீர் பயன்படுத்த முடியாது என கூறி சண்டையிட்டு உள்ளனர். ஆசியா மதம் மாற வேண்டும் என்று அவர்கள் வாதிட் டனர் எனவும், அதற்கு மறுப்பாக முகமது நபியை ஆசியா இறை நிந்தனை செய்தார் எனவும் குற் றஞ்சாட்டப்பட்டது. சச்சரவிட்டதை ஒப்புக்கொண்ட ஆசியா தொடக்கத் திலிருந்தே இறை நிந்தனை குற்றத்தை மறுத்து வந்தார்.

அவரது வழக்கறிஞர் அரசு தரப்பில் நிறைய முரண்பாடுகள் இருப்பதாகக் கூறி வந்தார்.

இப்படியான சூழ்நிலையில், ஆசியாவை ஆதரித்தவர் பஞ் சாப் மாகாண ஆளுநரான சல் மான். ஆசியாவை மன்னிக்க வேண்டும், தெய்வ நிந்தனைச் சட்டங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று கோரி வந்தார். இதன் காரணமாக அவர் 2011 ஆம் ஆண்டு, அவரது பாதுகாவ லராலேயே கொல்லப்பட்டார்.

# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மீதான 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை ரத்து!

நாடுகடந்து வாழும் மாலைதீவு முன்னாள் அதிபர் முஹம்மது நஷீதுக்கு விதிக்கப்பட்ட 13 ஆண்டு சிறை தண்டனையை ரத்து செய்து அந்நாட்டின் உயர்நீதிமன்றம் நேற்று முன்தி னம் உத்தரவிட்டுள்ளது.

மாலைதீவில் ஜனநாயக முறைப்படி மக் களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்நாட்டின் முதல் அதிபராக பதவி வகித்த முஹம்மது நஷீத், பின்னர் ஆட்சியை பிடித்த அதிபர் யாமீன் அப்துல் கையூம் அரசால் பயங்கரவாத வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு கடந்த 2015 ஆம் ஆண்டு 13 ஆண்டு சிறைக் காவலில் அடைக்கப்பட்டார். அவருக்கு எதிரான வழக்கு விசாரணை முறையான வகையில் நடத்தப் படவில்லை என உள்நாட்டு ஊடகங்களும், வெளிநாடுகளை சேர்ந்த முக்கிய தலைவர் களும் கருத்து தெரிவித்திருந்தனர்.

சில வெளிநாடுகளின் அழுத்தத்துக்கு இணங்கி, உடல்நலக்குறைவுக்காக சிகிச்சை பெற பிரிட்டன் நாட்டுக்கு அவர் செல்வதற்கு மாலைதீவு அரசு அனுமதி அளித்தது. பிரிட் டன் அரசால் அரசியல் தஞ்சம் அளிக்கப்பட்ட முஹம்மது நஷீத் தற்போது இலங்கையில் தங்கியுள்ளார்.

அவர் நாடு திரும்பினால் கைது செய்து சிறையில் அடைக்கப்படுவார் என்று தற்போதைய அதிபர் அப்துல்லா யாமீன் முன்னர் அறிவித்திருந்த நிலையில் கடந்த செப்டம்பர் 28 ஆம் தேதி நடைபெற்ற அதி பர் தேர்தலில் அப்துல்லா யாமீன் தன்னை எதிர்த்து போட்டியிட்ட முஹம்மது நஷீத் தலைமையிலான மாலைதீவு ஜனநாயக கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது சோலி யிடம் தோல்வியடைந்தார்.

58.4 சதவீதம் வாக்குகளை பெற்ற முஹம்மது சோலி வெற்றிபெற்றார் என தேர்தல் கமின் அறிவித்தது. இதனால், மாலை தீவின் புதிய அதிபராக இப்ராகிம் முகமது சோலி வரும் நவம்பர் 17 ஆம் திகதி பதவியேற்க உள்ளார். இந்த பதவியேற்பு விழாவிற்கு வருகை தருமாறு பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பயங்கரவாத வழக்கில் முஹம்மது நஷீத் தண்டிக்கப்பட்ட வழக்கு விசாரணை முறையாக நடைபெற்றதா என் பதை சீராய்வு செய்ய வேண்டும் என மாலை தீவு அரசின் தலைமை வழக்கறிஞர் உயர்நீதி மன்றத்தில் முறையீடு செய்திருந்தார்.

இதைப் பரிசீலித்த நீதிமன்றம் முன் னாள் அதிபர் முஹம்மது நஷீதுக்கு முன் னர் விதிக் கப்பட்ட 13 ஆண்டு சிறை தண் டனையை ரத்து செய்து நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவுக்கு காவல் துறை மற்றும் சிறை துறை அதிகாரிகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் எனவும் உத்தர விடப்பட்டுள்ளது.

நாடுகடந்து வாழ்ந்துவரும் முஹம்மது நஷீத் இன்னும் ஓரிரு நாள்களில் மாலை தீவுக்கு திரும்புவார் எனத் தகவல் வெளியாகி யுள்ள நிலையில் இந்தத் தீர்ப்பு அவரது கட்சியினர் மற்றும் ஆதரவாளர்கள் மத்தி யில் மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தி யுள்ளது, குறிப்பிடத்தக்கது.

# அமெ. நீதித் துறையில் உயர் பதவிக்கு இந்திய வம்சாவளி பெண்மணி நியமனம்



வொஷிங்டன், நவ.01

அமெரிக்காவில் கொலம்பியா மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளி பெண்மணி ஒருவரை நியமிக்கின்றமை குறித்து அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் ஆலோ சித்து வருகின்றார்.

அமெரிக்காவில் கடுமையான பாலியல் புகார்களுக்கு ஆளான பிரெட் கவனாக், சமீபத்தில் உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி ஏற்றார்.

பிரெட் கவனாக் இந்தப் பதவிக்கு வருவதற்கு முன்பாக வொஷிங்டன் மாகாணத்தில் கொலம்பியா மாவட்ட மேன்முறை யீட்டு நீதிமன்ற நீதிபதியாக இருந்தார்.

அவர் உயர்நீதிமன்ற நீதிபதியாகி விட்டதால், கொலம்பியா மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்றில் ஒரு நீதிபதி பதவி காலி யாக உள்ளது.

இந்த காலி இடத்துக்கு பரிசீலிக்கப்படுகிறவர்களில் ஒருவர், இந்திய வம்சாவளி பெண்ணான நியோமி ஜகாங்கிர் ராவ் (வயது 45) ஆவார்.

இவரிடம் சமீபத்தில் ஜனாதிபதி டிரம்ப் நேர்காணல் நடத்தி முடித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இவர் தற்போது அங்கு தகவல் மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்கள் அலுவலகத்தின் நிர்வாகியாக உள்ளார். இந்தப் பதவியில் இவரது நியமனத்துக்கு செனட் சபையில் நடந்த வாக்கெடுப்பில் ஆதரவாக 54 வாக்குகளும், எதிராக 41 வாக்குகளும் விழுந்தமை நினைவுகூரத்தக்கது.

இவரை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிப்பதில் டிரம்ப் ஆர்வம் கொண்டிருக்கிறார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

இவர் பார்சி இன இந்திய பெற்றோருக்கு மகளாக பிறந்தவர். அமெரிக்காவில் புகழ்பெற்ற ஏல் பல்கலைக்கழகம் மற்றும் சிகாகோ பல்கலைக்கழகத்தில் படித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் அமெரிக்காவில் ஆலன் லெப்கோவிட்ஜ் என்பவரை திருமணம் செய்து கொண்டுள்ளார். இந்த தம்பதியருக்கு 2 குழந் தைகள் உள்ளனர்.

# மீண்டும் இருண்ட யுகத்துக்கு செல்லப் போகின்றோமா?

## 2005 தவறை மீண்டும் இழைக்கலாமா?

வ.ந.கிரிதரன்







தற்போதுள்ள இலங்கைச் சூழலில் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவிடம் சரண டைந்திருக்கின்றார் மைத்திரி.

இலங்கை அரசியலைப் பொறுத்த வரையில் ரணில் விக்கிரமசிங்க துரதிருஷ்டம் பிடித்த அரசியல்வாதி.

அன்று யுத்த நிறுத்தம் கொண்டுவரக் காரணமாகவிருந்தார் அவர்.

ஆனால் அவர் துரதிருஷ்டம் சந்திரிகா அம்மையார் அவர் தலைமையிலான நாடாளுமன்றத்தைக் கலைத்தார். மீண்டும் மோதல்களுக்கு அடிகோலினார்.

அடுத்து கைக்கெட்டிய தூரத்திலிருந்த ஜனாதிபதி பதவியை விடுதலைப்புலிகள் தேர்தலைப் பகிஷ்கரித்ததன் விளைவாக ஏற்பட்ட சாதகச் சூழலில் மஹிந்த ராஜபக்ஷவிடம் பறித்தெடுத்தார்.

பின்னர் யுத்தத்தை வென்ற துட்ட காமினியாக வெறி பிடித்தாடிக்கொண்டிருந்த மஹிந்தவின் ஆட்சியிலிருந்து, உபகண்ட. உலக அரசியற் சக்திகளுடன் இணைந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து நல்லாட்சி என்னும் பெயரில் மைத்திரியுடன் இணைந்து, இலங்கையைக் கைப்பற்றினார். ஆனால் அதனையும் இன்று மைத்திரியின் முதுகு குத்தலால் இழந்து நிற்கின்றார்.

அன்று சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாக இருந்தபோது அவருக்குச் சகல நிறைவேற்று அதிகாரங்களும் இருந்தன. ஆனால் இன்று மைத்திரி பாலசிறிசேனாவின் ஜனாதிபதிப் பதவியை பத்தொன்பாதாவது திருத்தச் சட்டம் சிறிது கட்டுப்படுத்தி வைத்துள்ளது.

இந்நிலையில் அவர் பிரதமரைப் பதவி நீக்கம் செய்தமை இலங்கை அரசமைப்புக்கு முரணானது என்றே கருதுகின்றேன். இது பற்றி ஜெயம்பதி விக்ரமரட்ன (Jayampathy Wickramaratne) நல்லதொரு கட்டுரையினைக் 'கொழும்பு டெலிகிறாப் பத்திரிகையில்' The Removal Of The Prime Minister: Why It Is Unconstitutional? என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். இலங்கை அரசமைப்புச்சட்டத்தின் பல்வேறு சரத்துகள் பற்றி ஆராய்ந்து அவர் இம்முடிவுக்கு வந்திருக்கின்றார். அவரது கட்டுரைக்கான இணைய இணைப்பு: https://www.colombotelegraph.com/index.php/the-removal-of-the-prime-minister-why-it-is-unconstitutional/

இந்நிலையில் அலரி மாளிகையில் இன்னும் தங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன் மக்கள் ஆதரவை வெளிப்படுத்த அழைப்பு விடுத்த ஆர்ப்பாட்டம் வெற்றியையே அளித்துள்ளது. இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டு ஆதரவளித்திருக்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களைப்பொறுத்த வரையில் தற்போதுள்ள சூழலில் எவ்விதம் செயற்பட வேண்டும்?

இச்சமயத்தில் ஒன்றை நாம் மறக்கக் கூடாது. அது 2015ஆம் ஆண்டுக்கு முற்பட்ட சூழல். இலங்கையின் அனைத்து மக்களும் குறிப்பாகத் தமிழ் மக்கள் மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த இருண்ட காலகட்டம் அது. இருண்ட அக்கால கட்டத்தில் வெள்ளை வான் ஆள் கடத்தல்களும், காணாமல் போதல்களும் அன்றாட வாழ்வின் அம்சங்களாகவிருந்தன. இலங்கைத் தமிழ்ப் பிரதேசங்களில் படையினரின் ஆதிக்கம் கடுமையாகவிருந்த கால கட்டம் அது. யுத்த முடிவுக்குப் பின்னான கால கட்டத்தில் அபிவிருத்திகள் நடைபெற்றன. அது உண்மைதான். ஆனால், அவை மக்கள் மீதுள்ள உண்மையான பற்றினால் அல்ல. அவற்றின் மூலம் பெறப்பட்ட கோடிக் கணக்கான ஊழல் பணத்துக்காக அவை நிறைவேற்றப்பட்டன என்றே கருத வேண்டும். அந்த ஊழல் செயற்பாடுகளுக்கான வழக்குகள் பல இன்னும் நிலுவையில் நீதிமன்றங்களில் உள்ளன என்பதை மறந்து விடக்கூடாது.

இவ்விதமானதொரு சூழலிலிருந்து நாடு மீட்டெடுக்கப்பட்டது. ஆனால் கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் மக்கள் முன்னரைப்போல் பயந்து நடமாடும் சூழல் நீங்கியிருந்தது என்பதையும் மறக்கக் கூடாது. நாடாளுமன்ற அரசியல் நடவடிக்கைகளினூடாகத் தமிழ் அரசியல் வாதிகள் துணிச்சலுடன், எவ்வித அச்சமுமற்று உரத்துக்குரலெழுப்பும் சூழல் உருவாகியிருந்தது. 2015ற்கு முற்பட்ட ஆட்சிக்காலத்தில் இவ்விதமான சூழல் இருக்கவில்லை என்பதையும் மறக்கக் கூடாது.

தற்போதுள்ள அரசியற் சூழல் தென்னிலங்கையில் பலரையும் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆதரவாக மாற்றியுள்ளது. தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியாகும் கட்டுரைகள் பலவற்றுக்குக் கருத்துகளை இடும் சிங்கள வாசகர்கள் பலரின் கருத்துகளிலிருந்து இதனையே உய்த்துணர முடிகின்றது. அவர்களில் ரணிலை இதுவரை எதிர்த்தவர்கள் கூட தற்போது அவரை ஜனாதிபதி பதவி நீக்கிய செயலானது இலங்கை அரசமைப்புச்சட்ட விதிகளுக்கு முரணானது என்றே கருதுகின்றார்கள். மேலும் ஐக்கிய தேசியக் கட்சியினரின் வாக்குகளையும் பெற்று பதவிக்கு வந்தவர் ஜனாதிபதி மைத்திரி சிறிசேனா என்பதையும் மறந்துவிடக்கூடாது.

உண்மையில் எதற்காக 2015இல் மக்கள் அவருக்கு வாக்களித்தார்களோ, அவ்வாக்குகள் மூலம் பதவிக்கு வந்த அவர் இன்று அம்மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராகச் செயற்பட்டிருக்கின்றார். ஊழல் அரசியல்வாதிகளுக்கெதிராக மக்கள் வாக்களித்தார்கள். அந்த ஊழல் அரசியல்வாதிகளுக்கெதிரான வழக்குகள் இன்னும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன; விசாரணையிலுள்ளன. இந்நிலையில் அவ்வரசியல்வாதிகளை மீண்டும் பதவியில் அமர்த்தியிருப்பது நியாயமானதல்ல.

என்னைப் பொறுத்தவரையில் 2015ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் எக்காரணங்களுக்காக மைத்திரி – ரணில் கூட்டணிக்கு ஆதரவளித்தார்களோ, அதே காரணிகளுக்காக மைத்திரி – மஹிந்தா கூட்டணிக்கெதிராகவும் செயற்பட வேண்டும். மாறாகக் குதிரைப்பேரங்களுக்கு அடிபணிந்து மஹிந்தாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டால் எவ்விதம் 2005 ஜனாதிபதித்தேர்தலைப் புறக்கணித்து ஆட்சியை மஹிந்தா பெறக்காரணமாகவிருந்தார்களோ, அதனால் ஏற்பட்ட விளைவுகளுக்கு, மானுட அழிவுகளுக்குக் காரணமாகவிருந்தார்களோ, அது போன்றே எதிர்காலத்தில் மஹிந்தா – மைத்திரி அரசின் மனித உரிமை மீறல்களுக்கும் காரணமாகவிருப்பார்கள்.

இவை என் கருத்துகள். தற்போதுள்ள இலங்கையின் அரசியற் சூழல் பற்றிய உங்கள் கருத்துகளையும் பகிர்ந்துகொள்ளுங்கள். அவை எதிரானவையாக இருந்தாலும் அவற்றை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். ஆனால் அவை நட்புரீதியிலான தர்க்கங்களாக இருப்பதும் கூட மிக முக்கியம்.

# அரசமைப்புக்கு ஏற்ப செயற்படவேண்டும்

## கத்தோலிக்க ஆயர் பேரவை அரசிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 01

அனைத்து அரசியல் தலைவர்களும் குறுகிய மனப்பான்மையுடன் பலனற்ற விதத்தில் சிந்திக்காது, நாட்டின் நலன்கருதி தற்போது உருவெடுத்துள்ள அரசியல் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் யாப்புக்கு ஏற்ப செயற்படவேண்டுமென இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் நிலவும் சூழ்நிலை குறித்து இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையால் வெளியிடப்பட்டவிசேட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் ஆயர் ஜே.வின்ஸ்டன் எஸ். பர்னாந்து மற்றும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் பிரதம செயலாளர் ஆயர் டி. வலன்ஸ் மெண்டிஸ் ஆகியோர் கையொப்பமிட்டுவெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு: –

எம் நாட்டின் நிகழ்கால சூழ்நிலை குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அவதானம் ஈர்க்கப்பட்டுள்ளது.

சீர்குலைக்கப்பட்டுள்ள அரசியல் செயற்பாடுகளினால் ஏற்படும் விளைவுகள், அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பது நாட்டு மக்களே என்பதை அனைவரும் நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும்.

எனவே,எம்நாட்டின்அனைத்து அரசியல் தலைவர்களிடமிருந்தும் நாம் வேண்டிக்கொள்வது, குறுகிய மனப்பான்மையுடன் பலனற்ற விதத்தில் சிந்திக்காது, நாட்டின் எதிர்கால நலன்கருதி இப்போது உருவெடுத்துள்ள கிளர்ச்சிகரமான நிலைக்குத் தீர்வுகாண்பதற்கு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்புக்குஏற்பசெயற்படவேண்டுமென்பதாகும்.

எம் நாட்டில் இறந்தகால வரலாற்றைப் பின்னோக்கும் போது, நாம் முகங்கொடுத்த விடயங்கள், இரத்தம் சிந்தப்பட்ட நிலைகளே எம் கண்முன் நிற்கின்றன.

இதன் நிமித்தம் அனைவரிடமிருந்தும் நாம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வது எம் நாட்டின் மற்றும் மக்களின் நலனுக்காக மதிநுட்பத்துடனும் கட்டுப்பாட்டுடனும் பணியாற்றவேண்டும் என்பதாகும்.

இந்நிலையில் எடுக்கும் எவ்வித தீர்மானமாக இருப்பினும், அது நீதிக்கும், சட்டதிட்டங்களுக்கும் ஏற்ப அவற்றைக் கடைப்பிடித்தல் அவசியம்.

எனவே அனைவரும் ஞானத்துடனும் நல்லறிவுடனும் செயற்படுவதற்கான இறையாசீர் வேண்டுமெனவும் எம் நாட்டினை ஆசீர்வதிக்குமாறு இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்–என்றுள்ளது. (ஐ)

# வடக்கு முதலமைச்சர் அமைச்சின் செயலராக சரஸ்வதி மோகநாதன்



யாழ்ப்பாணம், நவ. 01

வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சுக்கான செயலாளராக திருமதி சரஸ்வதி மோகநாதன் நேற்றுக் காலை நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

முதலமைச்சர் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரன் நேற்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் பதில் செயலாளராக திருமதி சரஸ்வதி மோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் நிதிப்பிரிவின் செயலாளராக ஆர்.பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவியை வகித்து வந்த எஸ்.சந்திரகுமார் பதவி உயர்வு பெற்று சென்றதன் காரணமாக அந்த வெற்றிடத்திற்குப் புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலர் திரு.எல்.இளங்கோவன், பிரதம செயலாளர் அ.பத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# இலங்கை மீது பிரிட்டனும் மிகத் தீவிரமாக அவதானம்

லண்டன், நவ. 01

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டமையால் ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும், அங்குள்ள நிலைவரங்களை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஜெரிமி ஹன்ட் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கொன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர் ஹியூகோ ஸ்வயர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஹியூகோ ஸ்வயர் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரைப் பார்த்து, எனது நண்பன், இந்த வார இறுதியில் ஜனாதிபதியுடன் பேசும்போது, அவரது அண்மைய நடவடிக்கைகள், 19 ஆவது அரசமைப்புக்குமுரணானதுஎன்றும்,அனைத்துலகச் சமூகம், தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்கவையே சட்ட ரீதியான பிரதமராக ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் கூறுவாரா?

இதனை நாடாளுமன்ற வாக்கெடுப்பு மூலம் மட்டுமே மாற்ற முடியும், நாடாளுமன்றம் உடனடியாகக் கூட்டப்பட்டு, அந்த வாக்கெடுப்பை நடத்த வேண்டும்என்றார்.



இதற்குப் பதிலளித்துப் பேசிய பிரித்தானியவெளிவிவகார அமைச்சர்ஜெரிமிஹன்ட்,

இலங்கை ஜனாதிபதியுடன் பேசும் போது, நிச்சயமாக இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டுவேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புக் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவலை கொண்டுள்ளனர் என்பது எனக்குத் தெரியும். நாங்கள் நிலைமைகளை மிகவும் கவலையுடன் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# கட்டாக்காலி மாடுகளால் வவுனியாவில் விபத்துகள்



வவுனியா, நவ 1

வவுனியா நகரப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து வருவதால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனச் சாரதிகளும் பயணிகளும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக மாவட்ட செயலகத்துக்கு அருகே மன்னார் வீதி, ரயில் நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகே ஹொரவப்பொத்தானை வீதி ஆகிய பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக கட்டாக்காலி மாடுகள் நிற்பதால் தினசரி இரண்டுக்கு மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

வீதியில் காணப்படும் கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துமாறு நகர சபையினரிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் எவ்வித முன்னேற்றமும் இல்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் விபத்துக்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கும் மக்கள், கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ–100)

# சிங்கள பொலிஸ் பாதுகாப்பையே கோரும் முன்னாள் முதல்வர் விக்கி

## கூறுகிறார் வடக்கு மாகாண ஆளுநர் குரே

வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சிங்களப் பொலிஸாரின் பாதுகாப்பையே கோருகின்றனர். காரணம் தமிழ்ப் பொலிஸாரில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே.

கிளிநொச்சி அம்பாள்குளம் பாடசாலையில் இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் பேசும் பொலிஸாரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்புவது கிடையாது. காரணம் தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது இந்தப் பிரதிநிதிகளுக்கு நம்பிக்கையில்லை என்பதே. அரசியல்வாதிகள் மக்களிடம் உண்மையைப் பேசுவது கிடையாது. அவர்கள் தங்களின் தேர்தல் வெற்றிக்களுக்காகத் தவறான கருத்துக்களைப் பேசி வருகின்றார்கள். படித்த, பணம் படைத்த தமிழர்கள் கொழும்பில் வெள்ளவத்தை போன்ற இடங்களில் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்கின்றனர். திருமணமும் செய்துகொண்டுள்ளனர். ஆனால் ஏனைய தமிழ் மக்கள் அவ்வாறு நடந்து கொண்டால் அதனைத் தவறு என்கின்றனர். இதுதான் இவர்களின் நிலைப்பாடு.

வடக்கு மக்களும் தென்னிலங்கை மக்களும் தமிழ், சிங்கள மக்களும் ஒற்றுமையாக இந்த நாட்டில் வாழ்வதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதே எனது ஒரே ஒரே நோக்கம்.

அதிகாரம் வேண்டும், அடையாளம் வேண்டும் என்று போராடும் அதே தருணத்தில் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அபிவிருத்தி கொண்டுவர முயலவேண்டும். அப்போது மக்களின் வாழ்வில் சுபிட்சம் நிலவும்.

நானும் எனது தாய் தந்தையரும் மலையகத்தில் தேயிலைத் தோட்டத்திலே பணி புரிந்தவர்கள். அந்த மக்களின் வேதனை, துக்கம் அனைத்தையும் சிறுவயது முதலே நான் நன்கறிந்தவன். அந்த வகையில் இங்கு வாழ்கின்ற–அங்கிருந்து வந்த–மக்களின் மனநிலைகளை அறிந்து கொண்டுள்ளேன். இங்கே வாழ்ந்த இந்த மாணவர்களின் மக்களின் வளர்ச்சிக்காக என்னாலான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க எண்ணியுள்ளேன்–என்றார். (ஐ)


# ஹெரோயினுடன் கைதானவர் பொலிஸாரிடமிருந்து தப்பினார்

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் கடந்த 26ஆம் திகதி ஆறு கிராம் ஹெரோயினுடன் மன்னார் விசேட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட இளைஞன் ஒருவர் கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸாரின் காவலில் இருந்தபோது தப்பிச் சென்றுள்ளார்

இவரைக் கைது செய்ய முற்பட்டபோது மன்னார் விசேட போதைப்பொருள் தடுப்புப்பிரிவு உப பரிசோதகர் ஒருவருக்கும் சந்தேக நபருக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளன. கைதான சந்தேக நபர் கிளிநொச்சி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டார்.

சந்தேக நபருக்குக் காயம் ஏற்பட்டிருந்தமையால் அவரை கிளிநொச்சிப் பொலிஸார் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பில் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்தியப் பரிசோதனைக்காக அனுமதித்திருந்தனர். இதனையடுத்து கடந்த 28 ஆம் திகதி நான்காம் இலக்க நோயாளர் விடுதியில் இருந்து சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார்

# கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி பயிற்சியாளராக மைக் ஹசன்



ஒவ்வொரு நாடுகளில் நடத்தப்படும் தனித்துவமான ரி-20 லீக் தொடர்களில், இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். ரி-20 லீக் தொடருக்கு, கிரிக்கெட் உலகில் தனிச் சிறப்பு உண்டு.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாத காலப்பகுதியில் நடைபெறும் இத்தொடரில், உலகிலுள்ள பல முன்னணி வீரர்களை உள்ளடக்கிய எட்டு அணிகள் பங்கேற்கும்.

இதில் பொலிவுட் நடிகையான ப்ரீத்தி ஜிந்தாவின் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் ஒன்று. இந்த அணியில் ஆண்டின் பலம்வாய்ந்த வீரர்கள் உள்வாங்கப்பட்டாலும் அந்த அணி பெரியளவில் இதுவரை சாதித்தது கிடையாது.

இதேபோல இந்த ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். ரி-20 லீக் தொடரில், அஸ்வினை அணித் தலைவராகவும், ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரரான பிரட் ஹொட்ச்சை பயிற்சியாளராகவும் நியமித்து அணியை எழுச்சி பெற செய்ய, அணி நிர்வாகம் முயற்சி செய்தது.

ஆனால், இந்த தொடரில் முதலில் சிறப்பாக விளையாடிய பஞ்சாப் அணியால், இரண்டாவது கட்டத்தில் அதிகளவில் வெற்றிகளை குவிக்க இயலவில்லை. இதனால் முதல் நான்கு இடங்களை பிடிக்க அந்த அணியால் முடியாமல் போனது.

இந்நிலையில் எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். ரி-20 லீக் தொடரில், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி சாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தின் ஒரு கட்டமாக, அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளரான மைக் ஹசனை அணி நிர்வாகம் நியமித்துள்ளது.

இந்நிலையில் தனது பதவியினை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ள அடுத்த வாரம் மைக் ஹசன் இந்தியா செல்லவுள்ளார். அப்போது இரண்டு வருடத்திற்கான ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திடவுள்ளார்.

எதிர்வரும் 2019ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்குப் பின் வரை நியூசிலாந்து அணியின் பயிற்சியாளராக இருக்க வேண்டிய மைக் ஹசன், கடந்த ஜூன் மாதம் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இவரது தலைமையில் கடந்த 2015ஆம் ஆண்டு, நியூசிலாந்து அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. அத்தோடு 59 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 30 போட்டிகளில் வெற்றியை ருசித்துள்ளது.

எனினும், ரி-20 லீக் தொடரில் மைக் ஹசன், எந்த அணிக்கும் பயிற்சியாளராக இருந்ததில்லை. ஆனால் நியூசிலாந்து அணியின் பயிற்சியாளராக திறம்பட செயல்பட்டுள்ளார். இதனடிப்படையில் அவர் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் கிறிஸ் கெய்ல், லோகேஷ் ராகுல் ஆகிய சிறந்த துடுப்பாட்ட வீரர்கள், அணியின் முன்னாள் வீரரான விரேந்தர் சேவாக்கின் ஆலோசனைகள் என்பவற்றின் துணையும் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். ரி-20 லீக் தொடரில், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி சாதிக்கும் முனைப்பில் உள்ளது.

# சானியாவுக்கு ஆண் குழந்தை



இந்தியாவின் ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஸாவுக்கு நேற்று முன்தினம் காலை ஆண் குழந்தையொன்று பிறந்துள்ளது.

இந்தியாவின் ஐதராபாத்திலுள்ள தனியார் வைத்தியசாலையில் வைத்தே சானியா மிர்சா ஆண் குழந்தையை ஈன்றெடுத்துள்ளார். இந்தத் தகவலை சொஹைப் மாலிக் தனது டுவிட்டர் பக்கத்தில் மகிழ்ச்சியுடன் வெளியிட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சானியாவுடன் அவரது பெற்றோர் மற்றும் கணவர் சொயிப் மாலிக் உடனிருந்து கவனித்து வருகின்ற நிலையில், சானியா மிர்சா - சொஹைப் மாலிக்குக்கு டுவிட்டரில் ரசிகர்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ணம் வரை டோனி நீடிக்க வேண்டும்



உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரை டோனி இந்திய அணியில் நீடிக்கவேண்டுமென முன்னாள் இந்தியக் கிரிக்கெட் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

எம்.எஸ் டோனி உலகக்கோப்பை வரை கட்டாயம் விளையாட வேண்டும். விராட் கோஹ்லிக்கு தோனியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் தேவை.

இதில் எந்தவித சந்தேகமும் இல்லை. டோனி களத்தடுப்பைத் திறமையாகச் செய்வது உங்களுக்கே தெரியும். பந்து வீச்சாளர்களிடம் எப்படி பந்து வீசவேண்டும் இந்தியில் ஆலோசனை வழங்குவார்.

இவ்வாறான ஆலோசனைகள் விராட் கோஹ்லிக்கு மிகப்பெரிய அளவில் சாதகமாக அமையும் என அவர் குறிப்பிட்டார்.

அண்மைக் காலமாக டோனியின் துடுப்பாட்டத்தில் சிறிது பின்னடைவு ஏற்பட்டதால் மேற்கிந்திய தீவு மற்றும் ஆஸ்திரேலிய ரி-20 தொடருக்கான இந்திய அணியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டார்.

இதனால் ரி-20 கிரிக்கெட் வாழ்க்கை முடிவிற்கு வந்துள்ளதாக கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தொடர் தோல்வியால் ரியல் மட்ரிட் அணி பயிற்சியாளர் நீக்கம்



தொடர் தோல்வி காரணமாக ரியல் மட்ரிட் அணியின் தலைமைப் பயிற்சியாளரான ஜுலேன் லோபெட்டேகுய் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பிரபல உதைபந்து அணியான ரியல் மட்ரிட் அணி, உலகிலேயே மிக பிரபலமான கழக உதைபந்து தொடரான ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக் தொடர்ந்து 3 முறை வென்று சாதனை படைத்தது.

அதன்பின், அந்த அணியின் வெற்றி பயிற்சியாளர் ஷிடேனின் ஷிடேன் அணியை விட்டு விலகுகிறார் எனத் தெரிவித்தார். அத்துடன் ரியல் மட்ரிட்டின் நட்சத்திர வீரரான ரொனால்டோ அதிரடியான யுவான்டஸ் அணிக்குச் சென்றார்.

அதன்பின் ஸ்பெயின் தேசிய அணியின் பயிற்சியாளராக இருந்த ஜுலேன் லோபெட்டேகுய், ரியல் மட்ரிட் பயிற்சியாளராக அறிவிக்கப்பட்டார்.

உலகக் கிண்ணத்திற்கு முன்னதாக ரியல் மட்ரிட் அணியுடன் ரகசிய ஒப்பந்தம் போட்டுக் கொண்டதால் ஆத்திரமடைந்த ஸ்பெயின் உதைபந்து ஆணையம் ஜுலேன் லோபெட்டேகுயை அதிரடியாக பணி நீக்கம் செய்தது.

லோபெட்குயியின் கீழ் 2018–19 உதைபந்து சீசனில் ரியல் மட்ரிட் 3 வெற்றிகளுடன் நல்ல தொடக்கம் பெற்றாலும், அதன்பின் தொடர்ந்து தோல்வியடைந்து வந்தது.

சிறிய அணிகளுடனும் தோல்வி அடைந்ததால் ரசிகர்கள் கடும் அதிருப்தியில் இருந்தனர். இரு தினங்களுக்கு முன் நடைபெற்ற போட்டியில், முதல் இடத்தில் இருக்கும் எதிரியான பார்சிலோனாவிடம் 5–1 என படுதோல்வி அடைந்தது.

இந்நிலையில் ரியல் மட்ரிட் அணி பயிற்சியாளர் ஜுலேன் லோபெட்டேகுயை அதிரடியாக பணிநீக்கம் செய்துள்ளது. தற்காலிகமாக சான்டியாகோ சோலரியை தலைமைப் பயிற்சியாளராக நியமித்துள்ளது.

# இந்தியக் கிரிக்கெட் அழிவை சந்திக்கும்



கங்குலி எச்சரிக்கை

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நடவடிக்கைகளால் இந்திய கிரிக்கெட் அழிவு பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று சவுரவ் கங்குலி கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நடவடிக்கைகளை மேற்பார்வையிட, கடந்தாண்டு ஜனவரியில் வினோத் ராய் தலைமையிலான நிர்வாகக் குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்தது.

இக்குழு இந்திய கிரிக்கெட்டில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. இந்நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தற்காலிக நிர்வாகிகள் சி.கே.கண்ணா, அமிதாப் சவுத்ரி உள்ளிட்டோருக்கு முன்னாள் கப்டனும் பெங்கால் கிரிக்கெட் சங்கத் தலைவருமான கங்குலி கடிதம் எழுதியுள்ளார்.

அதில் பாலியல் புகாரில் ராகுல் ஜோரி சிக்கியதால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நன்மதிப்பு மீது கேள்வி எழுந்துள்ளது.

இந்த விவகாரத்தை நிர்வாகக் குழு கையாண்ட விதம் வேதனையளிக்கிறது.

இதே நிலை நீடித்தால், இந்தியக் கிரிக்கெட் அதலபாதாளத்துக்குச் சென்று அழிவைச் சந்திக்கும் என எச்சரித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிலை கவலையளிப்பதாக தெரிவித்துள்ள கங்குலி, பாரம்பரியமிக்க இந்தியக் கிரிக்கெட்டை மீட்டெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.







## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணிலை மீண்டும் பிரதமராக்கக் களமிறங்கியுள்ளது மேற்குலகம். அவரை மீண்டும் பிரதமராகக் கொண்டுவரும் சதி முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. அது சாத்தியப்பட்டால் ஜனாதிபதி பதவியை உடன் துறப்பேன் – என அவர் சபதம் செய்தார்.

புதிய அரசமைப்பில் வடக்கு – கிழக்கு இணைப்பு இல்லை; சமஷ்டியும் இல்லை. இவற்றைச் செய்ய வேண்டுமாயின் முதலில் என்னைக் கொல்ல வேண்டும். – என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க மீளவும் பிரதமராக பதவி வகித்தால் ஒரு மணித்தியாலமேனும் ஜனாதிபதி பதவியில் நீடிக்கமாட்டேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ரணில் செய்த துரோகத்தின் காரணமாகவே மஹிந்த ராஜபக்ஷவை புதிய பிரதமராக நியமித்தேன் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நண்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக அமைப்பாளர்களுக்குத் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, புதிய அரசை அமைப்பதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டி மிகவும் கடுமையான ஒரு நடவடிக்கையை அன்று எடுத்திருந்தேன். இன்று நான் எடுத்துள்ள நடவடிக்கை அதனை விடவும் வலுவானது. நாட்டையும் நாட்டு மக்களையும் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுத்துள்ளேன்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் அரசியல் சாசனத்தை காண்பித்து ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதவி வழங்குமாறு கோரியிருந்தார். அரசியல் சாசனத்தின் குறிப்பிட்ட சரத்தின் அடிப்படையில் ஜனாதிபதியின் அதிகாரங்களை பிரதமருக்கும் வழங்குமாறும் கோரியிருந்தார். இது தொடர்பான ஆவணமொன்றில் கையொப்பமிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

பிரதமரை நியமிக்க முடியும் என்ற போதிலும் எனது அதிகாரங்களைப் பிரதமரிடம் வழங்க முடியாது என நான் எழுத்து மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெரியப்படுத்தியிருந்தேன்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியை ஏற்றவுடன் அவர் ஜனாதிபதியாகவே செயற்படுகின்றார் எனவும், தாம் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் கடமையாற்றுவதாகவும் ஐ.தே.கவின் குறிப்பிட்ட உறுப்பினர் கூறினார்.

இந்தநிலைமையை நீடிக்க விடக்கூடாது என்ற காரணத்தினால் மஹிந்த ராஜபக்ஷவை நான் புதிய பிரதமராக நியமித்தேன் – என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சர் மஹிந்த சமரசிங்க உள்ளிட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும், வெளிநாடுகளின் கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்றத்தைக் கூட்டக் கூடாது என்றும் கூறியுள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மைத்திரி – மஹிந்த அரசில் நான் எந்தப் பதவியையும் பெற்றுக்கொள்ளப் போவதில்லை. தற்போதைய அமைச்சர்கள், மக்களுக்கு அவசியமான நிவாரணங்களை வழங்கி அவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டிய தேவை உள்ளது.

அதன் பின்னர், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முகம் கொடுத்து அரசை அமைக்கவேண்டும்.

வெளிநாடுகளின் தலையீடுகளுக்கு முகம் கொடுக்கும் பல்வேறு முயற்சிகளை இலங்கை எதிர்கொண்டுள்ளது. ஆனால், நாங்கள் பொதுவாக அதனைக் கவனிக்கவில்லை.

எமது அரசமைப்புக்கு அமைய நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும். வெளிநாட்டவர்கள் கேட்கின்றார்கள் என்பதற்காக நாங்கள் நாடாளுமன்றத்தைக் கூட்டக் கூடாது.

ரணில் விரும்பினால் அலரி மாளிகையில் தங்கியிருக்கலாம். அவர் பிரதமராகப் பாசாங்கு செய்கின்றார் – என்றார். (ஐ)

## அலரிமாளிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(ரணில்) அதற்குள்ளேயே அழுதபடி முடங்கியுள்ளார். இதைப் பார்த்து நாட்டு மக்கள் சிரிக்கின்றனர் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மஹிந்த, நேற்றுத் தமது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே, தாம்தான் இன்னும் சட்டரீதியான பிரதமர் எனக் கூறிவரும் ரணில் விக்கிரமசிங்கவைத் தாக்கிப் பேசினார்.

தேர்தலைப் பல வருடங்களாக ஒத்திவைத்து வந்தவர்கள், நாடாளுமன்றம் ஒரு மாதம் ஒத்திவைக்கப்பட்டதற்கு எதிராகக் குரல் எழுப்புகின்றனர். இது எந்த வகையில் நியாயம் ஆகும்? நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பது பெரிய விடயமல்ல. அதை நானும் செய்துள்ளேன்.

நாடு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்றது எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். முதலில் தெளிவானதொரு பொருளாதாரக் கொள்கை இருக்கவேண்டும். அது மீது மக்கள் நம்பிக்கை வைக்கவேண்டும். பூவிலிருந்து தேனீ தேன் எடுப்பதுபோலவே பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டும்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் மறுநாள் அதிகாலையே சிரித்தபடி அலரி மாளிகையை விட்டு நான் வெளியேறினேன். ஆனால், இவர் (ரணில்) அழுதபடியே விட்டுச் செல்ல மனம் இல்லாமல் அலரி மாளிகைக்குள்ளேயே முடங்கியிருக்கின்றார் என்றும் மஹிந்த கூறினார். (ஐ)

## சம்பந்தனுடனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான இரா. சம்பந்தனையும் சந்தித்து ஏசினார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இலங்கையின் தற்போதைய அரசியலில் நிலவும் குழப்பநிலை தொடர்பில் ஆராயப்பட்டதாகச் சம்பந்தனின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் இன்னும் நிலையான தீர்வொன்று எட்டப்படவில்லை.

குறிப்பாகப் பெரும்பான்மையை நிரூபித்துவிட்டு பிரதமர் குறித்து தீர்மானிக்குமாறு ஐக்கிய தேசிய கட்சி கூறியுள்ளது. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்பது குறித்தும் பலத்த எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

தமது ஆதரவு குறித்து வெளிநாடுகளுடன் கலந்தாலோசித்தே தெரிவிக்க முடியும் என ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்ததது.

அந்த வகையில் நேற்று இடம்பெற்ற ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியுடனான சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபாலவையும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சந்தித்துப் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி ஹனா சிங்கர், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் மார்கியு, பிரிட்டனின் இலங்கைக்கான தூதுவர் ஜேம்ஸ் டவ்ரிஸ், கனடாவின் இலங்கைக்கான தூதுவர் டேவிட் மக்கினன், ஜேர்மனியின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் ரொதட் உள்ளிட்டவர்கள் நேற்றுச் சபாநாயகரைச் சந்தித்தனர்.

இந்தத் தூதுவர்கள் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை குறித்து சபாநாயகருடன் கலந்துரையாடினர்.

அரசமைப்புக்கு முரணாக மஹிந்தவை பிரதமராக நியமித்தமையாலும் நாடாளுமன்றத்தை உடன் கூட்டாமல் முடக்கி வைத்திருப்பதாலும் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை குறித்து தமது நாடுகளின் கடும் அதிருப்தியை சபாநாயகரிடம் அவர்கள் வெளியிட்டனர்.

அரசியல் குழப்ப நிலையால் இலங்கை பொருளாதாரம் உள்ளிட்ட பல பாதிப்புக்களைச் சர்வதேச ரீதியில் எதிர்கொள்ளும் எனவும் அவர்கள் எச்சரித்தனர்.

இதன்போது, இலங்கைக்கு எதிராக எவ்வித இராஜதந்திர நடவடிக்கைகளையும் வெளிநாடுகள் அவசரப்பட்டு முன்னெடுக்கக்கூடாது என்று அவர்களிடம் சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.

நாட்டின் அரசமைப்புக்கு இணங்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் நாடாளுமன்றத்தை உடன் கூட்டி அரசியல் குழப்ப நிலைக்குத் தீர்வு காண வழிவிடுமாறும் ஜனாதிபதியிடம் தான் நேரில் எடுத்துரைக்கவுள்ளதாகவும் தன்னைச் சந்தித்த வெளிநாடுகளின் தூதுவர்களிடம் சபாநாயகர் தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்தும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது குறித்தும் சபாநாயகர் கரு ஜயசூரியவின் கருத்துக்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இது பற்றி பேசி இறுதி முடிவை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் அனைவருக்கும் பொதுவானவர். ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது அரசியல் ரீதியில் சார்பு கொண்டவராகவோ அவர் இருக்கக்கூடாது . அதேபோல் வெளிச்சக்திகளின் அழுத்தங்களுக்கு ஏற்ப உள்நாட்டு விடயங்களை நாங்கள் தீர்மானிக்க முடியாது . அரசமைப்பின்படியே நான் செயற்பட்டேன். அதில் எந்த சந்தேகமும் வேண்டாம் என்றும் இந்தச் சந்திப்பில் சபாநாயகரிடம் ஜனாதிபதி தெரிவித்தார் என அறியமுடிகின்றது.

ஆனால், சபாநாயகரும் இதன்போது பதிலடி கொடுத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

என்னைச் சபாநாயகராகத் தெரிவு செய்தது நாடாளுமன்றமே. நான் அரசியல் கட்சிகளுக்கோ சார்பாகவோ அல்லது வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்படமாட்டேன். நாடாளுமன்றச் சம்பிரதாயங்களின் அடிப்படையில் அரசமைப்புக்கு இணங்க நான் செயற்படுவேன். தற்போதைய அரசமைப்பின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமர் பதவியில் நீடிக்கின்றார். மஹிந்த ராஜபக்ஷதான் பிரதமர் என்றால் நாடாளுமன்றத்தை உடன் கூட்டி அவருக்கான பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவேண்டியது அவசியம். எனவே, நாடாளுமன்றத்தை முடக்கி வைத்திருப்பது நாட்டுக்கு அழகல்ல என்று இதன்போது ஜனாதிபதியிடம் சபாநாயகர் திட்டவட்டமாகத் தெரிவித்தார் என அறியமுடிகின்றது.

இந்நிலையில், பெரும்பாலும் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் அதாவது எதிர்வரும் 06ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மட்டில் நாடாளுமன்றத்தைக் கூட்ட ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கக்கூடும் எனவும் தெரியவருகின்றது. (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் அம்மையார் இவ்விடயத்தை வலியுறுத்தினார்.

ஜனாதிபதிக்கும் ஐ.நா. வைதிவிடப் பிரதிநிதிக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு சுமார் 30 நிமிடங்கள் நீடித்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலையை அடுத்து, அரசமைப்பின் பிரகாரம் செயற்படுமாறு இலங்கைக்கு மேற்குலகம் உட்படச் சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபாலவால் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவையும் அந்த நாடுகளின் தூதுவர்கள் சந்தித்துப் பேசியுள்ளனர்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகளால் சீற்றமடைந்துள்ள மேற்குலகமும், ஐ.நா. தரப்புகளும் இலங்கை மீது கடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தயாராகி வருகின்றன எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே நேற்று ஜனாதிபதிக்கும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதிக்கும் இடையில் சந்திப்பு நிகழ்ந்தது.

இதன்போது இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை தொடர்பில் ஜனாதிபதி ஐ.நா. வதிவிடப் பிரதிநிதிக்கு தெளிவுபடுத்தியதுடன், அரசின் சகல நடவடிக்கைகளும் அரசமைப்பின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்து ஜனநாயக கட்டமைப்புக்குள் செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் சபை தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புகளையும் பாராட்டினார்.

இவற்றைச் செவிமடுத்த ஐ.நா. வைதிவிடப் பிரதிநிதி, அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பநிலையைத் தீர்த்து அபிவிருத்தியின்பால் கவனஞ்செலுத்தவேண்டுமென வலியுறுத்தினார்.

இலங்கைக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கத் ஐ.நா. தயாரென்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# சீனாவிடம் தன் இறைமையை இழந்து நிற்கிறது இலங்கை

## அமெ. பாதுகாப்பு அமைச்சர் விமரிசனம்




சீனாவுடனான உடன்பாட்டின் விளைவாக, இலங்கை தனது சொந்த துறைமுகத்தின் இறைமையை இழந்து விட்டது என அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ஜேம்ஸ் மாட்டிஸ் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக, சீனாவுக்கும், இலங்கை க்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்பாட்டையே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைதிக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவகத்தில், உரையாற்றிய அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ஜேம்ஸ் மாட்டிஸ் –

சீனாவின் கடனைப் பயன்படுத்திய சில நாடுகள், அதனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் கவலையடைந்துள்ளன.

இலங்கையில் என்ன நடந்தது என்று பாருங்கள், அவர்கள் தமது சொந்த துறைமுகத்தின் இறைமையை இழந்து விட்டனர்.

இது போன்ற பிரச்சினைகள் குறித்தும் வொஷிங்டனில் விரைவில், சீன பாதுகாப்பு அமைச்சருடன் நடத்தவுள்ள சந்திப்பின் போது வெளிப்படையாகப் பேசுவேன் – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொந்தளிப்பான அரசியல் சூழலில் கொழும்பு வந்தார் புதிய அமெ. தூதர்



கொழும்பு,நவ.01

இலங்கை அரசியல் சூழல் பரபரப்பான கட்டத்தை அடைந்துள்ள சூழ்நிலையில் இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் நேற்று கொழும்பை வந்தடைந்துள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்ட, அலய்னா ரெப்லிட்ஸ் கடந்த வாரம் வொஷிங்டனில் நடந்த நிகழ்வில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டிருந்தார்.

அவர் இலங்கையில் கடமைகளைப் பொறுப்பேற்கத் தயாராகி வந்த நிலையில், திடீரென கொழும்பில் சடுதியான அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தன.

அமெரிக்காவுக்கும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திய இந்த அரசியல் மாற்றங்களை அடுத்து, அவசர அவசரமாக, அலய்னா ரெப்லிட்ஸ் நேற்று கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கொழும்பு வந்து சேர்ந்த அவர் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# நாட்டின் அரசியல் நெருக்கடி குறித்து கருத்து தெரிவிப்பது பொருத்தமற்றது

## சட்டமா அதிபர் சபாநாயகருக்குக் கடிதம்

கொழும்பு, நவ. 01

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பாகக் கருத்து தெரிவிப்பது பொருத்தமற்றது எனக் கருதுவதாகச் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அவர் எழுதியுள்ள பதில் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய பிரதமர் பதவி மற்றும் அரசில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து கருத்து வெளியிடுவது அரசமைப்பின் கீழ் சட்டமா அதிபரின் வரையறைக்கமையச் சிறந்தது அல்லவெனவும் அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய பிரதமர் பதவி மற்றும் அரசில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து சட்டமா அதிபரின் கருத்தை வினவி, சபாநாயகர் கடந்த 27ஆம் திகதி அனுப்பிய கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். (ஐ)


அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2018

சித்தியடைந்த மாணவர்களுக்கான

பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்று 150 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 03.11.2018 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2018

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை




செல்வி J.கிருஜனா 196 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் 3ஆம் இடத்தினையும்,
தேசிய ரீதியில் 4ஆம் இடத்தினையும் பெற்றமையுடன்
112 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.
இவர்களையும் இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள், பகுதித்தலைவர்,
அதிபர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:

பெற்றோர், நலன் விரும்பிகள்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.